தோற்றத்தில் ஓர் திகைப்பு!
விலையில் ஓர் வியப்பு!
NATIONAL PALAYAKAT Co.
HORSE
MADRAS & PENANG.
நேஷனல் பழையகாட் கம்பெனி
நீடித்த உழைப்புக்கும்
உறுதியான சாயத்துக்கும்
நயமான விலைக்கும்
நேர்த்தியான உடைக்கும்
குதிரை மார்க் கைலிகள்
நேஷனல் பழையகாட் கம்பெனி
விஜயபுரம் ★ திருவாரூர்.
கிளை : 23 சோலியா ஸ்ட்ரீட் (பினாங்கு) மலேயா

காமினியா அழகு சாதனங்கள்

பட்டுப் போன்ற கூந்தலையும்,
வசீகரமுள்ள வதனத்தையும்,
மென்மையான மேனியையும்
அளிக்கும் என்கிறார்:

பரதநாட்டியப் புகழ்
வைஜயந்திமாலா.

★ அழகிய ஸ்திரீக
இயற்கையாகவே கா
னியா அழகு சாதன
களையே விரும்புகிறு
கள். ஈடு இணையி
லாத இந்த அழகு சா
னங்களினால் எளிதி
வசீகரம் பெறமுடியு

காமினியா ஹேர்ஆயில்
தில்பஹார் டாய்லெ
சோப்
ஆட்டோ தில்பஹார்
காமினியா ஸ்னோ.



ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., BOMBAY 2.

சென்னை, மைசூர், திருவாங்கூர்-கொச்சி ராஜ்யங்களுக்கு சோல்
ஏஜெண்டுகள்:

ஸ்ரீ ஸி. ரெங்கராஜு நாயுடு, கோயமுத்தூர்.

முஸ்லிம் முரசு

பொருள் அடக்கம்

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

மலர் 8	சென்னை, டிசம்பர்-1955 ஹிஜ்ரீ 1375, ரபீயுல் ஆகிர்—ஜமாதுல் அவ்வல்	இதழ் 6

பிரளய காலம் / மக்களுக்கு மகத்தான தலையங்கம் ... 3
முரசொலி சோதனை ,, ... 6
ஜின்னூஹ் ஹெக்டர் பொலித்தோ ... 12
மன நிறைவு (சிறுகதை) 'மஹதி' ... 24
நான் அறிந்த இஸ்லாம் சுந்தரமூர்த்தி ... 33
மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ராஜேந்திர குமார் ... 38
இஸ்லாத்தில் சமய சகிப்புத் தன்மை மார்மடியூக் பிக்தால் ... 43
நூர்ஜஹான் சபதம் (தொடர் கதை) சம்பந்தம் ... 49
இஸ்லாமிய உலகம் "லைப்" கட்டுரை ... 55
இஸ்லாமிய காதைகள் ... 58
கேள்வி பதில் ... 61

முஸ்லிம் முரசில் வரும் கதைகளும் அவைகளிலுள்ள பெயர்களும் யாரையும் குறிப்பிடுவனவல்ல; முற்றிலும் கற்பனையே.

இங்கே கத்தரிக்க

சந்தாவுக்கு எழுதும் பாரம்

இந்த பாரத்தைப் பூர்த்தி செய்து, கத்தரித்து, இதன் வலது பக்கத்திலுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் உங்களுக்குத் தவருமல் முஸ்லிம் முரசு கிடைக்கும்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு
18, ராமசாமி தெரு,
சென்னை-1.

நான் இன்று ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 (அயல் நாடு ஒரு வருடம் ரூ. 6. இரண்டு வருடம் ரூ. 11) மணி ஆர்டரில், அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியிருக்கின்றேன்.

பெயர்..

விலாசம்..

முஸ்லிம் முரசு

பிரளய காலம்

மக்களுக்கு
மகத்தான சோதனை!

"கடந்த 30-11-55-ம் தேதியன்று மாலை மறைந்து, இரவு நேரம் வந்தவுடன் காற்றின் வேகம் கடுமையாகி விட்டது. வேதாரண்யம், தோப்புத்துறை, கோடிக் கரை, அகஸ்தியம்பள்ளி முதலிய பிரதேசங்களில் திடீரென கடல் தண்ணீர் எட்டு அடி உயரத்துக்கு உள்ளே புகுந்து விட்டது. இதனால் பள்ளத்தாக்கான இடங்களில் வசித்து வந்தவர்கள் பத்திரமான இடத்துக்குப் போக முடியாமல் உயிர் துறந்தார்கள்.

" தீவக்காடு, மணியன் தீவு முதலிய இடங்களிலும், உப்பளப் பிரதேசங்களிலும் இருந்தவர்களுள் அநேகம் பேர் வெள்ளத்தில் சிக்கி உயிர் துறந்தார்கள். உயிர் துறந்தவர்களில் பெண்கள் அதிகமென்று தெரிய வரு கிறது. இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள், உயிருக்குப் பயந்து ஓடியதை நினைத்து இன்னமும் நடுங்குகிறார்கள். மரங்களில் தொங்கிய மாந்தர்கள் பலர்; கைகாட்டி மரத்தில் தொங்கிய வர்கள் மற்றுஞ் சிலர்.

"பல இடங்களில் அநாமதேயமாகக் கிடந்த 143 சவங்களை ரெவி னியூ அதிகாரிகள் அடக்கம் செய்திருக்கின்றனர். சொந்தக்காரர்களும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களும் இதைவிடப் பன்மடங்கு பிரேதங் களை அடக்கம் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

"வியாழன், வெள்ளிக்கிழமை இரண்டு தினங்களிலும் மேற்படி பிர தேசம் பிணக்காடுகளாய் விளங்கியதென்றும் கூறப்படுகிறது. ஏராள மான கால்நடைகள் ஆங்காங்கு செத்துக் கிடந்

"பிணங்களையும் ஆடுமாடுகளையும் அடக்கம் செய்வதிலேயே அதிகாரிகளும், பெரிய மனிதர்களும் கவனம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

"எல்லா ஆறுகளும் உடைத்துக் கொண்டு, மக்கள் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடம் போக முடியாது போயிற்று. உற்றார் உறவினர்களைப் பறிகொடுத்து, சொத்துக்களையும் இழந்து தவிக்கின்ற மக்களைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது."

இவைகளெல்லாம் நம்பத்தக்க பத்திரிகைச் செய்திகள்.

"தோப்புத்துறை, வேதாரண்யம், அகஸ்தியம் பள்ளி ஆகிய கடற்கரை ஊர்களில் சுமார் 270 பேர்கள் உயிரிழந்திருக்கின்றனர். வீடுகள் இடிந்து விழுந்தும், தண்ணீருக்குள் மூழ்கியும் இந்த எண்ணிக்கைக்கு நிகரான மக்கள் இறந்திருப்பார்கள் என்று அஞ்சப்படுகிறது"

சர்க்காரின் அதிகார பூர்வமான அறிக்கை இவ்வாறு கூறுகிறது.

48 மணி நேரம் இடைவிடாமல் பொழிந்த பெரு மழையினாலும், மிக வேகமாக அடித்த புயற்காற்றினாலும் கிழக்கு இராமநாதபுரம் ஜில்லாவில் சுமார் நூறுபேர்கள் உயிரிழந்திருப்பதாக சர்க்கார் வெளியிட்ட அறிக்கையில் கூறப்படுகிறது.

ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஐயாயிரம் ஏரிகளில் சுமார் நாலாயிரம் ஏரிகள் உடைத்துக் கொண்டதால் இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களின் பயிர்கள் நாசமாகி விட்டன. சுமார் 12 ஆயிரம் ஆடு மாடுகள் இறந்து விட்டன. ஏறத்தாழ 2500 வீடுகள் இடிந்து போய் விட்டன.

இங்கே வெள்ளத்தில் அடிபட்டு, திட்டுக்களில் நின்று தவிக்கின்ற மக்களுக்கு ஆகாய விமானங்களிலிருந்து அரிசியும் ஆகாரப் பொருள்களும் போட்டு உதவியளிக்கப்படுகின்றது.

நாட்டு மக்களுடன் அறவே தொடர்பில்லாமல, போக்கு வரவுக்கு வசதியின்றி, தீவுகள் போன்ற திட்டுக்களில் சுமார் ஒரு வார காலம் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த நம் சோதர மக்களின் துன்பமும் துயரமும் சொல்லுந்தரமல்ல.

கடந்த காலத்தில் இத்துணைப் பெரிய மழையும் புயலும் சேர்ந்து, மகத்தான சோதனைக்கு மக்களை உள்ளாக்கி யிருப்பதாக நம் நினைவுக்கு எட்டிய வரையில் தெரியவில்லை.

தஞ்சை ஜில்லாவில் வேதாரண்யம், முத்துப்பேட்டை, தோப்புத்துறை, அரந்தாங்கி, பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம், நாகப்பட்டினம், மன்னார்குடி மற்றும் பல ஊர்கள் இந்த இயற்கையின் கொடுமைகளுக்கு இலக்காகியிருக்கின்றன. ராமநாதபுரம் ஜில்லாவில் திருவாடானை, திருப்பத்தூர், சிவகங்கை, பரமக்குடி, சாத்தூர், முதுகுளத்தூர் ஆகிய தாலூக்காக்களும், மதுரை, திருச்சி ஜில்லாக்களில் சில பகுதிகளும் இக்கடுமையான சோதனைக்கு உள்ளாகியிருக்கின்றன. இந்த இயற்கையின் கொடுமைகளுக்கு இலக்கான மக்களின் துன்பமும் துயரமும் கஷ்டமும் நஷ்டமும் மனித முயற்சியால் போக்கத் தக்கனவாயில்லை. ஆயினும் இயற்கை விளைத்த கொடுமைகளைப் பற்றிக் கேள்வியுற்றவுடன் மக்களின் துயரைப் போக்குவதற்காக மாபெரும் வேகத்துடன் செயலாற்றிய சென்னைப் பிரதமரையும், ஏனைய அரசாங்க அதிகாரிகளையும் பாராட்டுகிறோம்.

மனித சக்தியை மிஞ்சிய இம்மகத்தான சோதனைக்கு இலக்காகியுள்ள மக்களின் துயரைப் போக்க மத்திய அரசாங்கமும் ராஜ்ய சர்க்காரும் தங்களால் இயன்ற வரையில் முயன்று வருகின்றன. ஆயினும் நாட்டுப் பொது மக்கள்

அளிக்கும் ஏராளமான நன்கொடைகளின் மூலமே இத்துயரத்துக்காளான மக்களின் துன்பத்தை ஓரளவு தணிக்க முடியும்.

இச் சோதனைக்கு இலக்கான மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஏற்பட்டுள்ள நஷ்டத்தைக் கணக்கெடுப்பதாயின் பல கோடி ரூபாய்கள் தேவைப்படலாம். ஆனால் தங்களுக்குச் சொந்தமான அனைத்தையும் இழந்து, கதியற்ற நிலையில் இருப்பவர்களின் கண்ணீரை முதலில் துடைக்கவேண்டும். இதற்கான முயற்சிகளை அரசாங்கம் துரிதமாக எடுத்துக் கொண்டிருப்பது பற்றி மகிழ்ச்சியடைகிறோம். இச்சமயம் நம சென்னை [illegible] ஸ்ரீ காமராஜ் அவர்கள் தமது கடமையைத் திறம்பட நிறைவேற்றி வருகின்றார் என்பதைக் குறிப்பிட வேண்டும். அவருடைய முயற்சிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கின்ற முறையில் மத்திய அரசாங்கமும் தன்னால் இயன்றதைச் செய்யுமென்று நம்புகிறோம். இந்த இயற்கையின் மகத்தான சோதனைக்கு இலக்காகி நஷ்டமடைந்த நடுத்தர மக்களுக்கும் அரசாங்கம் ஏதாவது நஷ்டயீடு அளிக்க முன்வருமாக !

மக்களுக்கு இது ஒரு மகத்தான சோதனை என்பதில் சந்தேகமில்லை.

" அத்துணை வேதனையளிக்கும் துன்பம் எத்தகையதென்பதை நீங்கள். அறிவீர்களா ? சிதறிக் கிடக்கும் ஈசல்களைப்போல் மனிதர்கள் அப்பொழுது ஆகிவிடுவர்". (குர்ஆன், 101 : 1-4).

புதுடில்லியில் அரேபியா மன்னர் ஸஊத் அவர்கள் இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத அவர்களால வரவேற்கப்பட்டபோது எடுத்த படம். பிரதம மந்திரி பண்டித நேருவும் அன்னிய நாட்டு அமைச்சர் டாக்டர் சய்யித் மஹ்மூதும் மன்னருக்கும் ஜனாதிபதிக்கும் அருகில் அமர்ந்துள்ளனர்.

முரசொலி

இந்தியாவில் ருஷ்யத் தலைவர்கள்

சென்ற மாதம் இந்தியாவுக்கு விஜயம் செய்த அயல் நாட்டுப் பிரமுகர்கள் மூவரைப்பற்றி நினைவு கூராமற் போனால் 1955-ஆம் ஆண்டின் முக்கியத்தை நாம் உணரவில்லை என்றே கருதப்படும். இன்று உலக அரங்கில் மிக முக்கியமான வல்லரசாகத் திகழும் சோவியத் ருஷ்யாவின் பிரதமர் தோழர் புல்கானினும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முதற் காரியதரிசியான குருஷேவும் நம் அரசாங்க விருந்தினர்களாக புது டில்லிக்கு வந்து சேர்ந்து, சென்னை, பம்பாய், கல்கத்தா, காஷ்மீர் முதலான முக்கிய நகரங்களில் சுற்றுப்பிரயாணம் செய்தனர். இவர்களுக்குப் பின்னர், ஆத்மீகவாழ்விலே உலக முஸ்லிம் களின் மத்திய பீடமாக விளங்கி வருகின்றமக்காவைத் தலைநகராய்க் கொண்ட சவூதி அரேபியா வின் அதிபதி மன்னர் சவூத் வந்து சேர்ந்தார்.

இந்த மூன்று வெளி நாட்டுப் பிரமுகர் களுக்கும் நாட்டுப் பொது மக்கள் நல்ல வரவேற்பு அளித்திருக்கின்றனர். விருந்தினர்களை வரவேற்பதில் பெயர் பெற்றவர்களானதமிழர்கள் வாழும்சென்னையில் சோவியத் நாட்டுத் தலைவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு ஈடு இணையற்றது. இன்று அமெரிக்க, பிரிட்டிஷ் வல்லரசுத் தலைவர்களுக்கெல்லாம் தலைவலியைக் கொடுத்திருக்கும் சோவியத் பிரதமர் புல்கானினுடைய கோவா பற்றிய பேச்சும் சென்னை ஐலண்டு மைதானத்தில் தான் நிகழ்த்தப்பட்டது!

ருஷ்யத் தலைவர்களுக்கு இந்தியாவில் கிடைத்த வரவேற்பைக் கண்டு மேற்கு வல்லரசுகள் மனக் குழப்பம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவும் கம்யூனிஸ்ட் சார்பு நாடாக ஆகிவிடுமோ என்று அமெரிக்கா வும் பிரிட்டனும் அஞ்சி நடுங்குகின்றன. ஆனால் ருஷ்யத் தலைவர்களுக்கு இந்தியப் பொது மக்கள் அளித்த அமோக வரவேற்பைக் கண்டு அமெரிக்காவோ பிரிட்டனோ அஞ்சவேண்டியதில்லை. மேற்கு வல்லரசுகள் இந்தியாவின்

புல்கானின்

நலனுக்குப் பாதகமாக நடந்தால் கூட சோவியத் ருஷ்யாவுக்கு இந்தியா வால் பிடித்து ஓடாது என்பதை அமெரிக்க அரசியல் வாதிகள் அறிந்து கொள்ள வேண்டும்,

சில மாதங்கட்கு முன்பு இந்தியப் பிரதமர் பண்டித நேரு சோவியத் ருஷ்யாவுக்கு விஜயம் செய்திருந்த போது. அங்கே அவருக்குக் கிடைத்த வரவேற்பு மிகமிக ஆடம்பரமாக இருந்தது. அதைவிட அமோகமாக சோவியத் தலைவர்களுக்கு இங்கே வரவேற்பளிக்கப்பட்டது. விருந்தினர்களை வரவேற்பதில் இந்தியர்கள் வேறு யாருக்கும் சளைத்தவர்களல்ல என்று ருஷ்யத் தலைவர்களுக்கு உணர்த்தப்பட்டதென்பதுதான் உண்மை. அமெரிக்காவும் பிரிட்டனும் நினைப்பதுபோல் நாம் சிவப்பாகப் போவதுமில்லை. செங்கொடிக்கு அடிமைகளாகப் போவதும் கிடையாது. இது பற்றி அமெரிக்கா அஞ்சவேண்டாம். பிரிட்டனும் பயப்படவேண்டாம். சர்வதேசப் பிரச்னைகளில் அமெரிக்காவும் பிரிட்டனும் நேர்மையாக நடப்பதாயிருந்தால் இந்தியாவைப் பற்றியோ. எகிப்துமுதலான அரபு நாடுகளைப் பற்றியோ அந்த வல்லரசுகள் சிறிதும் கவலைப்படவேண்டியதில்லை.

குருஷேவும் குதுப் மினாரும்

கம்யூனிஸ்ட்கள் எந்த விஷயத்தையும் தங்களுடைய கொள்கையின் கண்ணோட்டத்துடன் தான் பார்க்கிறார்கள் என்பதற்கு ருஷ்யத் தலைவர் குருஷேவ் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக விளங்குகின்றார், டில்லியிலுள்ள குதுப்மினாரை குருஷேவ் கண்டவுடன், "அடிமைகளைக் கட்டாய வேலை வாங்கி கட்டப்பட்ட நினைவுச் சின்னம் இது" என்று கூறினார்.

நம் நாட்டிற்கு விருந்தினராய் வந்திருந்த ருஷ்யத் தலைவர்கள் நமது முன்னோர்கள் எழுப்பிய தாஜ்மஹால், குதுப்மினார் போன்ற ஞாபகச் சின்னங்களைப் பார்த்துப் பாராட்டியிருக்கவேண்டும். அதுதான் விருந்தினரின் பெருந்தன்மைக்கு அடையாளம்.

கட்டிடக் கலைக்கும் காதலின் பெருமைக்கும் ஒரு அற்புதச் சின்னமாக விளங்குகிறது. ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால். அதே விதமாக ஒரு அடிமையாகப் பிறந்தவன் அரசனாக உயர்ந்த கதையைச் சொல்லுகிறது டில்லியிலுள்ள குதுப்மினார்.

இக் கட்டிடங்களைப் பார்த்தவுடன் இம்மாதிரி எண்ணங்கள் தான் யாருக்கும் உதிக்கக்கூடும். ஆனால் குருஷேவுக்கு மட்டும் அவைகளின் சிறப்பியல்கள் தெரியவில்லை, வரலாற்று உண்மைகளையும் அவர் அறியவில்லை,

அடிமைகளிடம் கட்டாய வேலை வாங்கி கட்டப்பட்டது குதுப்மினார் என்று நாம் சரித்திரத்தில் காண முடியாது. நம் நாட்டைப்பற்றி நமக்கே தெரியாத ஒரு உண்

குருஷேவ்

...த்தார்களோ தெரியவில்லை! முஸ்லிம்கள் அடிமைகளை விலைக்கு வாங்கி அவர்களுக்கு விடுதலை அளித்துச் சம உரிமைகளுடன் அவர்களை நடத்தினார்கள். இதன் பயனாகவே இஸ்லாமிய உலகில் அடிமைகளும் அரசர்களாக விளங்க முடிந்தது.

இதற்கு ஒரு சிறந்த நினைவுச் சின்னமாகத் திகழ்வதுதான் குதுப்மினார். இதனை அடிமைகளே கட்டினார்கள் என்று கூறுவதற்குச் சரித்திர ஆதாரமில்லை. பணமும் உணவுமில்லாமல் பட்டினி கிடந்து யாரும் இவ்வளவு பெரிய கட்டிடத்தை ...மைத்திருக்க முடியாது. எனவே அடிமைகளைக் கட்டாய வேலை வாங்கியே குதுப்மினார் எழுப்பப் பெற்றதென்று கூறுவது அறிவுக்குப் பொருந்தாத செய்தி; சரித்திர ஆதாரமற்ற கூற்று என்பதில் சந்தேகமில்லை.

நாகரிகம் வளர்ந்துள்ள இவ் விருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 'பூலோக சுவர்க்கம்' என்று வருணிக்கப்படுகின்ற சோவியத் நாட்டில்தான் அடிமை வேலை நடந்து வருவதாக ஆதாரபூர்வமான செய்திகள் கிடைக்கின்றன. ருஷ்யத் தலைவர்கள் மற்றவர்களைக் குறை கூறுமுன் தங்களையே திருத்திக்கொள்ள வேண்டும்.

அள்ளியிறைக்கும் அரேபியா மன்னர்!

இந்திய அரசாங்கத்தின் விருந்தினராக அண்மையில் நம் நாட்டுக்கு விஜயம் செய்த அரேபியாவின் அதிபதி மன்னர் சுவூத் அவர்களுக்கு நம் நாட்டு மக்கள் அளித்த வரவேற்பு அமோகமாக இருந்தது. புது டில்லியிலும் மற்றும் பல முக்கிய நகர்களிலும் அரேபிய மன்னருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு உபசாரங்களுக்கு அவர் கூறிய மறுமொழிகளைப் படிக்கும்போது, நம் நாட்டில் அவருக்குக் கிடைத்த வரவேற்பும் உபசாரமும் அவரை மிகவும் மகிழ்வித்திருக்கின்றன வென்பதை நன்கு அறிந்துகொள்ளலாம். புது டில்லியில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது, இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள் கூறிய உபசார மொழிகளை இங்கே குறிப்பிட வேண்டும்.

"இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பே இந்தியாவுக்கும் அரேபியாவுக்குமிடையே கலாசார சமூக வர்த்தகத் துறைகளில் தொடர்பு இருந்து வந்தது. இத்தொடர்பு, கடந்த ஆயிரம் ஆண்டுகளாக இஸ்லாத்தின் மூலம் மேலும் வலுப்பெற்று வந்திருக்கிறது. இந்தியா பிரிவினை செய்யப்பட்ட பிறகும் இந்நாட்டில் 4 கோடி முஸ்லிம்கள் இருக்கின்றனர். ஆண்டு தோறும் சுமார் பத்தாயிரம் முஸ்லிம்கள் இங்கிருந்து சுவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்கின்றனர்" என்று இந்திய ஜனாதிபதி கூறினார்.

'குர்ஆன்' மீன்!

பம்பாய் மீன் காட்சிச் சாலையில் ஒரு புதுமையான மீன் இருக்கிறது. இதன் பெயர் "குர்ஆன் மீன்" என்று வழங்குகிறதாம். இந்த மீனின் வாலில் சில எழுத்துக்கள் காணப்படுகின்றன. அவைகளைச் சேர்த்துப் படித்தால் "ஷாஹெ அல்லாஹ்" என்று உச்சரிக்கப்படுகிறது. இதன் பொருள் "ஆண்டவனே பெரியவன்" என்பது. இந்த மீனின் வாலிலுள்ள எழுத்துக்களை அரேபியா மன்னர் மிகவும் கவனமாகப் படித்துப் பார்த்தாராம். இந்த மீனின் புகைப்படமொன்றும், மீனிலாகா மந்திரியால் மன்னருக்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றது!

இதற்கு அரேபியாவின் மன்னர் அளித்த பதிலில், "முஸ்லிம்களைப் பற்றிய உங்கள் நல்லெண்ணங்களை நீங்கள் இத்துணைத் தெளிவாகத் தெரிவித்தது என் இதயத்தை மிகவும் கவர்ந்துவிட்டது" என்று கூறினார்.

அரேபியாவின் அதிபதி நம் நாட்டிலே சில முக்கிய நகரங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து வந்த போது, பொது நல ஸ்தாபனங்களுக்கும், தனி மனிதர்களுக்கும் அவர் வழங்கிய நன்கொடைகளைக் கண்டு நமது நாட்டு மக்களுக்கெல்லாம் ஓரே வியப்பும் திகைப்புமாக இருந்தது.

அரேபிய மன்னர் சுவூத் நம் நாட்டிலுள்ள சில கல்வி நிலயங்களுக்கும் கலாசார ஸ்தாபனங்களுக்கும் இரண்டே நாட்களில் சுமார் இரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் நன்கொடையளித்திருக்கின்றார்!

இவர் தமக்காக நடத்தப்பெற்ற வரவேற்புக் கூட்டங்களைச் சமாளித்த போலீஸ் அதிகாரிகளுக்கெல்லாம் பதுறுபார் கணக்கில் அன்பளிப்புகள் வழங்கினார்! இவருக்காக சிம்லாவில் நடந்த வரவேற்புக் கூட்டத்திலே நெற்றியில் சிறிது காயமடைந்த ஒரு சிறுமிக்கு ஆயிரம் ரூபாயும், இவரது மோட்டாரில் அடிபட்டு இறந்துபோன ஒரு பெட்டைக் கோழிக்காக அதன் சொந்தக்காரியான கிழவிக்கு 200 ரூபாயும் கொடுத்திருக்கிறார்! இவையெல்லாம் அரேபிய மன்னரின் தயாளகுணத்தை மட்டும் காட்டவில்லை; அவருடைய பரம்பரைப் பழக்கத்தையும் பண்பையுங்கூட காட்டுகின்றன.

"இப்படியும் இப்படியும் செல்வத்தை அள்ளி யிறைப்பவரையன்றி, மற்றப் பணக்காரரெல்லாம் ஏழைகளே, அவ்வாறு அள்ளி யிறைப்பவர்கள் மிகச் சிலரே" என்று அரேபியாவில் பிறந்த அல்லாஹ்வின் தூதர் கூறியுள்ளார்கள். (புகாரீ, 43 . 3)

"நபிகள் நாயகம் தங்களுடைய அழகிய கரங்களினால் ஓரே நாளில் ஒரு லட்சம் திர்ஹங்களை (சுமார்

"மௌலானா என்று அழைக்காதீர்!"

"தலைவர்களைக் கண்டவுடன் மக்கள் அதிக உற்சாகத்தினால் பொருத்தமில்லாத 'ஜே!' கோஷங்கள் எழுப்புவதை ஜின்னா விரும்பவில்லை. ஒருநாள் அவர் ஒரு சிறிய நகருக்கு விஜயம் செய்தார். அங்கே குடியானவர்கள் அவருக்குப் பெரிய ஊர்வலம் நடத்தி அவரை வரவேற்றனர். "மவ்லானா முஹம்மதலீ ஜின்னா ஜிந்தாபாத்" என்று விண்ணதிரகத்தினார்கள். ஜின்னா உடனே அந்த ஊர்வலத்தை நிறுத்தச் சொன்னார். தமது கை விரலினால் அக்கூட்டத்தைச் சுட்டிக்காட்டி "என்னை 'மவ்லானா' என்று அழைப்பதை நிறுத்துங்கள்! நான் உங்களின் மதத் தலைவனல்ல: அரசியல் தலைவன். 'மிஸ்டர் ஜின்னா' என்றோ, அல்லது 'முஹம்மது அலீ ஜின்னா' என்றோ என்னை அழையுங்கள். இனிமேல் அந்த மவ்லானா கூடாது. உங்களுக்கு நான் சொல்வது புரிகின்றதா?"

இதை யறிந்த மக்கள் அசந்து போயினர். மவ்லானா என்று கூறி அவரைக் கண்ணியப்படுத்த நினைத்தவர்கள் இப்பொழுது மௌனமாகி விட்டனர்!

வ(இருபத்தையாயிரம் ரூபாய்) 'இப்ப டியும் இப்படியும்' அள்ளியிறைத் துத் தீர்த்துவிட்டார்கள்'' என்று சரித்திரம் கூறுகிறது. இன்று அரே பியாவின் மன்னர் தம்மிடமுள்ள செல்வத்தை அள்ளி யிறைப்பதை பார்க்கும்போது, நபிகள் நாயக மவர்களின் வாழ்வும் வாக்குந் தான் நம் நினைவுக்கு வருகின் றன.

அரபியர்கள் தங்களுடைய மகிழ்ச்சிகரமான நேரங்களில் மக்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கி மகிழ்வது அவர்களின் நல்லபழக்கம்என்பதையும் இங்கே நாம் நினைவு கூர்தல் வேண்டும்.



ஹாஜி முஹம்மது மீரா சாஹிப்

பொது நலப் பிரியரின் மறைவு

ஈரோடு நகருக்கு அருகிலுள்ள பெரிய அக்ரஹாரம் பிரபல தோல் வியாபாரி ஜனப் இ. கே. ஹாஜி முஹம்மது மீரா சாஹிப் அவர்கள் தமது 79-ம் வயதில் 18-11-55 ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 3 மணிக்கு இறைவனடி சேர்ந்தார் கள் என்பதையறிந்து வருந்து கிறோம். (இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்).

ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த இப்பெரியார், சுமார் 50 ஆண்டு களுக்கு முன் மிகச் சிறிய அளவில் தோல் பதனிடும் தொழிலைத் துவக்கித் தமது பெரு முயற்சியினு லும் அறிவு நுட்பத்தினுலும் அதனை யொரு பெரிய தொழிற்சாலையாக இன்று விளங்கச் செய்தார்.

இவர் தமது ஊழியர்களிடம் அன்பும் தயையும் உடையவராக

முஸ்லிம் முரசு

1956 ஜனவரி இதழில்

"அத்தா துர்க்" — துருக்கியின் தந்தையெனப் பெயர் பெற்ற முஸ்தபா கமாலின் இளமைப் பருவ வாழ்க்கைச் சித்திரமும்,

"இந்தியாவில் பர்தா" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையும்,

"ஜே. எம்." எழுதும் சிறுகதையும் வருகின்றன.

வும், பொது மக்களிடம் பெரிதும் நெருங்கிய தொடர்பு உடையவராகவும் இருந்து அனைவரின் அன்பிற்கும் பாத்திரராய் விளங்கினார்.

இப்பெரியார், பல பொது ஸ்தாபனங்களில் தொடர்பு கொண்டு பணியாற்றி வந்தார். அநேக பொது நல ஸ்தாபனங்களுக்குத் தாராளமான பொருளுதவி புரிந்து, தாம் பெற்ற செல்வத்தின் பயனை எய்திப் பெருமையடைந்தார். தந்தையின் பிரிவாற்றாமையால் பெரிதும் வருந்தி நிற்கும் இவரது அருமைப் புதல்வர்களுக்கும் உற்றார் உறவினர்க்கும் நம் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். மறைந்த பெரியாரின் ஆன்மாவுக்கு ஆண்டவன் சாந்தியும் சமாதானமும் நல்குவானாக! ஆமீன்!

அட்டைப் படம்

நவம்பர் 29 ந் தேதியன்று நன்றி யறிவிப்புப் பிரார்த்தனை செய்வதற்காக அரேபியாவின் மன்னர் சுஊத் அவர்கள் புது டில்லியிலுள்ள ஜும்ஆ மஸ்ஜிதுக்குச் சென்றார். அப்போது அவர்சென்ற வழிகளிலும் அண்மையிலுள்ள வீட்டு மாடிகளிலும் இரண்டு இலட்சம் முஸ்லிம்கள் கூடி நின்று மன்னர் மஸ்ஜிதுக்குச் சென்றபோதும், அங்குப் பிரார்த்தனை செய்து திரும்பியபோதும் பலத்த கரகோஷமிட்டு சந்தோஷ ஆரவாரம் செய்தனர். 'அல்லாஹு அக்பர்' என்ற கோஷம் வானைப் பிளக்க, மஸ்ஜிதின் முன் மாடியிலிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் மன்னர் மீது மலர் மாரி பொழிந்தனர்.

இது மஸ்ஜிதிலிருந்து மன்னர் திரும்பியபோது எடுக்கப்பட்ட படம்.

முஹம்மது அலீ ஜின்னாவைப்பற்றி இந்த இதழில் காணப்படும் வாழ்க்கைக் குறிப்புக்களும், அவரது கருத்துரைகளும் ஹெக்டார் பொலித்தோ எழுதிய "ஜின்னாஹ்" என்னும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. —ஆசிரியர்.

கேள்வி—பதில்

இந்த இதழில் அன்பளிப்புப் பெற்றவர்கள்:

எஸ். எம். நூர்ஜஹான்,
சேலம். ரூ 2

விசாலாக்ஷியம்மாள்,
பொன்னுகரம். ரூ 2.

எம். எஸ். காஜா
முஈனுத்தீன், கீரூர். ரூ 2.

அ. முஹம்மது இபுறாஹீம்,
பாலிங், கெடா, ரூ 2.

புதிய புத்தகங்கள்!

எம். ஆர். எம். அப்துர் ரஹீம் எழுதிய
எண்ணமே வாழ்வு
விலை ரூ 3—8—0.

ஆர். பி. எம். கனீ எழுதிய
குத்புல் ஹிந்த்
காஜா முயீனுத்தீன் சிஷ்தி
விலை ரூ 2—8—0.

எஸ். செய்யத் இப்ராஹீம் சாஹிப் எழுதிய
சுல்தான் சலாஹுத்தீன்
விலை ரூ 1—0—0.

தபால் செலவு வேறு.
கிடைக்குமிடம் :
அன்பு நூல் நிலையம்,
18, ராமசாமி தெரு,
மண்ணடி, சென்னை-1.

✓

புத்தகச் சுருக்கம் ஆங்கில நூல்

12✓

ஜின்னாஹ்

பாக்கிஸ்தானைத் தோற்றுவித்தவர்

ஹெக்டார் பொலித்தோ
எழுதியது

★

" தோல்வி என்பது நான் அறியாத ஒரு வார்த்தை "
—முஹம்மது அலீ ஜின்னாஹ்.

விலை 18 ஷில்லிங்

ஜான் மர்ரே, அல்பே மர்லே வீதி,

லண்டன்.

முஹம்மது அலீ ஜின்னாவும், அவரது சகோதரி
மிஸ் பாத்திமா ஜின்னாவும்.

★

இந்நூலின் முன்னுரையில்,

"இப் புத்தகம் எழுதும் பொருட்டு நான் செல விட்ட இரண்டு வருட காலத்தில் இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் முஹம்மது அலீ ஜின்னாஹ்வை யறிந்துள்ள சுமார் இருநூறு பேர்களைக் கண்டு பேசி யிருக்கிறேன்."—ஹெக்டர் பொலித்தோ.

உலகத்திலேயே ஒரு பெரிய முஸ்லிம் நாட்டின் தலைநகராக இன்று விளங்கும் கராச்சியில் பல குறுகலான வீதிகள் இருக்கின்றன. இவைகளில் நியூன்ஹாம் ரோடு என்பதும் ஒன்று. இங்கிருந்த ஒரு வீடு இப்பொழுது புதுப்பிக்கப் பட்டு,பால்கனிகள் அமைந்த கட்டிடமாக விளங்குகிறது. இங்கே தான் முஹம்மதுஅலீ ஜின்னா பிறந்தார். பிறந்த தேதி நிச்சயமாகத் தெரியவில்லை. கராச்சியில் உள்ள பள்ளிக்கூட ரிஜிஸ்டரில் 1875 அக்டோபர் 20 என்று குறிப்பிடப் பட்டிருக்கின்றது. ஆனால், 1876ல் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று கிறிஸ்துமஸ் தினத்தன்றே தாம் பிறந்ததாக ஜின்னா எப்பொழுதும் கூறுவார்.

பழைய கராச்சியில் ஒரு சிறிய இல்லத்திலே 86 வயதுடைய அழகிய மூதாட்டி பொருவர் வாழ்ந்து வருகிறார். முஹம்மதலீ ஜின்னா ஒரு சிறு பையனாக இருந்த போது அவரை நினைவு கூரத்தக்க ஒரு சிலருள் இவரும் ஒருவர். அப்பொழுது இவர் 16 வயது மணப் பெண். கராச்சியில் ஜின்னாவின் நெருங்கிய உறவினருக்கு வாழ்க்கைத் துணைவியாக வந்து சேர்ந்தார். அப்பொழுது ஜின்னாவுக்கு ஏழு வயது.

இந்த ஃபாத்திமா பாய் தமது மகன் முஹம்மதலீ கஞ்சி என்பவருடன் வசித்துக் கொண்டிருக்கிறார். அங்கே ஒருநாள் மாலையில் நான் சென்றேன். அந்த அம்மாள் தமது அறையிலே என்னை வரவேற்றார். முஹம்மதலீ கஞ்சி தமது தாயாருக்கு அருகில் கிடந்த ஒரு படுக்கையின் மீது சில காகிதங்களை விரித்து, என்னை உட்காரச் சொல்லி, ஜின்னாவின் ஆரம்ப வரலாற்றைக் கூறினார்.

ஜின்னாவின் முன்னோர்கள் ஆகாகானுடைய கோஜா வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் இந்தியாவில் உள்ள அநேக முஸ்லிம் குடும்பங்களைப் போல் பூர்வீகமாக ஹிந்து சமூகத்திலிருந்து வந்தவர்களே யாவர். இந்தப் பாலைவனத்துக்கு வடக்கேயுள்ள மூல்தான் பகுதியிலிருந்து நீண்ட காலத்துக்கு முன்பே கத்தியவார் தீபகல்பத்தில் ஜின்னாவின் குடும்பம் குடியேறியதென்று முஹம்மதலீ கஞ்சி கூறினார். பின்னர், கத்தியவாரிலிருந்து கராச்சிக்கு வந்து சேர்ந்தவர்கள், அங்கேயே நிரந்தரமாகத் தங்கி ஒரு சாதாரண நிலையில் வாழ்க்கை நடத்தினர். ஜின்னாவின் ஆறாவது வயதில் அவர் கராச்சியில ஒரு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டார். பத்தாவது வயதில் ஒரு கப்பலில் ஏறி பம்பாய்க்குச் சென்று கோகுல் தாஸ் தேஜ் பிரைமரி ஸ்கூல் என்னும் பள்ளியில் ஒரு வருடம் படித்தார். பதினொன்றாவது வயதில் கராச்சிக்குத் திரும்பி, சிந்து மத்ரஸாஹைஸ்கூலில் சேர்ந்தார். பதினைந்தாவது வயதில் கராச்சியில் உள்ள கிறஸ்தவ மிஷனரி சொஸைட்டி ஹைஸ்கூலில் சேர்ந்து படித்தார். அதே ஆண்டில் கத்தியவார் கோஜா வகுப்பைச் சேர்ந்த அமாய்பாய் என்னும் பெண்ணுக்கு ஜின்னா தமது

பெற்றோர்களால மண முடித்து வைக்கப்பெற்றார். 1892ல சட்டக் கல்வி பயில்வதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார்; அங்கே அவர் இருந்தபோது அவருடைய இளம் மனைவி இறந்துவிட்டாள். அதற்குப் பின்னர் விரைவில் ஜின்னாவின் தாயாரும் இறந்தார். தந்தை மிகவும் ஏழையாகி விட்டார்."

இச்சந்தர்ப்பத்தில் பாத்திமா பாய் தமது கையை உயர்த்தி, மகன் பேசிக்கொண்டிருந்ததற்கிடையே கூறினார்; "அவன் ஒரு நல்ல பையன்; புத்திசாலிப் பிள்ளை. நாங்கள் எட்டு பேர்கள் நியூன்ஹாம் ரோடில் உள்ள வீட்டின் முதல் மாடியில்வசித்துவந்தோம். அவன் இரவில் குழந்தைகளெல்லாம் தூங்கிக்கொண்டிருக்கும்போது, விளக்கின் எதிரில் உறங்கும் குழந்தைகளின் கண்களில் வெளிச்சம் படாதபடி, ஒரு எண்ணெய் விளக்கிற்கு எதிரே ஒரு அட்டையை வைத்துவிட்டுப் படித்துக் கொண்டேயிருப்பான். ஒரு நாள் இரவில் நான் அவனிடம் சென்று, "இவ்வளவு அதிகமாகப் படித்தால் உனக்கு வியாதி வந்துவிடும்" என்று சொன்னேன். அதற்கு

அவன், "பாய்! நான் கஷ்டப்பட்டு வேலை செய்தாலன்றி வாழ்க்கையில் எதையும் சாதிக்க முடியாதே!" என்று கூறினான்.

ஜின்னாவின் வரலாற்றை எழுதுவதாயின், ஏற்கெனவே அவரைப்பற்றி வழங்குகின்ற கதைகள் குழப்பத்தை உண்டுபண்ணுகின்றன. ஜின்னாவைப் பற்றி சரோஜினி நாயுடுவினால் 1917ல் எழுதப் பெற்ற வாழ்க்கைக் குறிப்பில் "ஒரு பெரிய பணக்கார வியாபாரியின் மூத்த மகன்" என்றும், "ஏராளமான செல்வத்தில் பிறந்து வளர்ந்தவன்" என்றும் காணப்படுகிறது. இது உண்மையல்ல. பாத்திமாபாய் சொல்வதேபோல் ஒரு வீட்டின் இரண்டு அறைகளில் தான் அவருடைய குடும்பம் வாழ்ந்து வந்தது. ஜின்னாவின் தந்தை ஒரு தோல் வியா



ஜின்னாவும் காந்தியும்

பாரியாக இருந்தார். ஜின்னுவைப் போலவே அவரும் ஒரு ஒல்லியான மனிதர். அவருடைய பெயர் ஜின்னு பூஞ்சா. அவருடைய மனைவிக்கு ஏழு குழந்தைகள் பிறந்தன. அவருடைய மூத்த குழந்தையின் பெயர் முஹம்மது அலீ. மற்றவர்கள் ரஹ்மத், மரியம், அஹ்மத் அலீ, ஷிரீன், பந்தே அலீ, பாத்திமா, இவர்களுள் பாத்திமாவைத் தவிர மற்றவர்களைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. பாத்திமா பல் டாக்டராகப் பயிற்சி பெற்று, பிற்காலத்திலே தமது சகோதரருடன் இணை பிரியாது வாழ்ந்து வந்தார்.

மற்றவர்களைக் குறைகூறல்

முஹம்மதலீ ஜின்னு அவர்கள் நடுத்தர வயதைத் தாண்டிக் கொண்டிருந்தார். அப்போதெல்லாம் அலீகர் பல்கலைக் கழகத்தில் அங்குள்ள மாணவர்களுடன் பேசிக்கொண்டு அனேக நாட்களைக் கழித்திருக்கின்றார். அப்பொழுது மற்றொரு கல்லூரியிலிருந்து சில மாணவர்கள் ஜின்னுவிடம் சென்று தங்களுக்குச் சில நல்ல யோசனைகள் கூறுமாறு கேட்டனர். அவர்களில் சிலர் தங்களைவிட மூத்தவர்களைப் பற்றிக் குறை கூறினார்கள். உடனே ஜின்னு குறுக்கிட்டு அவர்களை ஒருகேள்வி கேட்டார்: "உங்களில் எத்தனை பேர் சைக்கிளில் விளக்கு வைத்திருக்கிறீர்கள் ?" என்று கேட்டார். அவர்களில் ஒருவர் தான் தன்னுடைய சைக்கிளில் விளக்கு இருக்கிறதென்று சொன்னார். உடனே ஜின்னு பதிலளித்தார்: "நீங்களே சட்டத்தின் புனிதத் தன்மையைக்கௌரவிக்க இன்னமும் கற்றுக் கொள்ளாதபோது மற்றவர்களைக் குறைகூற வேண்டாம்".

ஜின்னுவின் பெயரைப் பற்றிப் பாகிஸ்தானில் பலவிதமான கதைகள் உலவுகின்றன. ஜின்னு பள்ளிக்கூடப் பையனாக இருந்த காலத்தில் ஒருநாள் தெருவில் சென்று கொண்டிருந்த போது அவரைக் கண்ட ஜோஸியன் ஒருவன் "ஜின்னு வளர்ந்த பின்பு ஒரு அரசனாக விளங்கக் கூடிய அறிகுறிகள் அவரிடம் காணப்படுகின்றன" என்று தெரிவித்தானாம் !

ஜின்னு தமது சிறு வயதில் புத்தகம் படிப்பதற்கு ஒரு விளக்குக்குக் கூட வழியில்லாமல் இரவு நேரங்களில் தெருக்களில் உள்ள லாந்தர் கம்பத்தின் கீழேஉட்கார்ந்து படித்ததாக மற்றொரு கதை சொல்லப்படுகிறது ! பள்ளிக்கூடத்தை விட்டு வெளியில் செல்லும்போதெல்லாம் போலீஸ் கச்சேரிகளில் போய் வக்கீல்களின் சண்டைகளை கவனிப்பதில் தான் தமது ஓய்வு நேரங்களை அவர் செலவிட்டார் என்றும் சொல்லப் படுகிறது. ஆனால் இதற்கு ஆதாரம் கிடையாது. ஜின்னு சிறு பையனாக இருந்த காலத்தில் தமது தந்தையுடன் ஒரு நீதிமன்றத்துக்குச் சென்றது பற்றி அவர் கூறியிருக்கின்றார். முதன் முதலாக கறுப்பு அங்கியும், வெள்ளைக் கழுத்துப்பட்டையும் அணிந்திருந்த ஒரு வக்கீலை ஜின்னு கண்டவுடன், "நான் ஒரு பாரிஸ்டர் ஆக விரும்புகிறேன்" என்று தந்தையிடம் சொன்னாராம். ஜின்னுவின் ஆரம்ப காலத்தைப் பற்றி அதிகமாகத் தெரியவில்லை, அவர் கடிதம் எழுதுகிறவரும் அல்ல. தினக்குறிப்பு எழுதும் பழக்கமும் அவருக்கு இல்லை. கடந்துபோன நாட்களைப் பற்றிய எண்ணங்களை எழுத்து வடிவில் ஆக்கவும் அவர் விரும்பவில்லை. ஆனால், ஒன்று நிச்சயம். சரோஜினி நாயுடு கூறுவது போல் அவர் ஒரு பணக்கார வியாபாரியின் மகனுமல்ல, அதிக செல்வத்தில் வாழ்ந்தவருமல்ல ! அல்லது தெரு விளக்கில் படிக்குமளவிற்குப் பரம ஏழையுமல்ல. இரண்டுக்கும் நடுமையுமான நிலையில் இருந்தார் என்பதே உண்மை.

1896-ஆம் ஆண்டு. வசந்த காலம். முஹம்மது அலீ ஜின்னு தமது சட்டப் பரீட்சையில் தேறி, 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றுக்கொண்டு இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பினுர். அப்பொழுது அவருடைய வயது இருபது இருக்கும். ஆங்கிலமே அவருக்கு முக்கிய மொழியாக இருந்தது. உருதுவில் அதிகச் தேர்ச்சியில்லை. முஸ்லிம்களை சுதந்தரப் பாதையில் தலைமை வகித்து நடத்திச் சென்றபோது கூட அவர் தமது திட்டங்களை யும் நிபந்தனைகளையும் அந்நிய மொழியிலேயே விளக்கினுர். அவருடைய உடைகள்கூட ஆங்கில முறையிலேயே இருந்தன. அவர் தம் கடைசி நாட்களில்தான் முஸ்லிம் கனவான்கள் அணிகின்ற 'ஷெர்வானி'யும் 'ஷல்வாரு'ம் உடுத்திக் கொண்டார்.

ஆங்கிலத்தில் பேசும்போது அவரிடம் ஒருவித நூதனப் பழக்கம் இருந்து வந்தது. வாழ்நாளின் இறுதி வரையில் அவர் அப்பழக்கத்தை விடவில்லை. ஒருவருக்கு எதிரில் நின்று பேசும்போது தமது விரல்களை ஆட்டிக் கொண்டே, "மை டியர் ஃபெல்லோ! யூ டுனேட் அண்டர்ஸ்டாண்டு" (My dear fellow, you do not understand தம்பி! உனக்குத் தெரியவில்லையே!) என்று அடிக்கடி கூறுவார்.

காயிதெ ஆஸம் கராச்சிக்குத் திரும்பி வந்தபோது அவர் தம்மையொரு அன்னியர் போலவே கருதி தமது மக்களிடை வாழ்ந்து வந்தார். அப்பொழுது அவருடைய தாயார் காலமாகி விட்டார். குழந்தைப் பருவத்தில் ஜின்னுவை மணக்திருந்த முதல் மனைவியும் இறந்து விட்டாள். தந்தையோ தாம் சேமித்து வைத்திருந்த சிறிதளவு செல்வத்தையும் இழந்து விட்டார்.

ஜின்னு அவர்கள், நியூன்ஹாம் ரோடிலிருந்த தமது இரண்டு அறைகளில் மிகவும் சிரமத்துடன் தமது பொழுதைக் கழித்திருக்க வேண்டும். ஒரு இளம் பாரிஸ்டர் தமக்கு வேண்டிய கட்சிக்காரர்களைத் தேடிக் கொள்வதற்கோ, அல்லது அவரை உற்சாகப்படுத்தி ஊக்கமளிப்பதற்கோ உதவி செய்வார் யாருமில்லை!

லண்டன் வாழ்க்கையை ஏற்றுக் கொள்வதற்கு ஆவலுடன் விரித்து நின்ற அவரது கரங்கள், கராச்சியிலே எவ்வித வாய்ப்பும் கிட்டாமல் கட்டுண்டு கிடந்தன.

ஜின்னுவின் ஆரம்பகால கராச்சி வாழ்க்கையைப் பற்றி மற்றொரு கதையும் கூறப்படுகிறது. ஒரு பெரிய வழக்கறிஞரின் மகளை ஜின்னு மணப்பதாக இருந்தால் அவரது காரியாலயத்தில் ஜின்னுவுக்கு ஒரு வேலை கிடைக்குமென்று தெரிவிக்கப்பட்டதாம்! இதுபோன்ற கேவலமான பேரத்துக்கும் ஜின்னுவுக்கும் வெகு தூரம்!

ஜின்னு அவர்கள் 1897-ல் சராச்சியை விட்டுப் புறப்பட்டு பம்பாய்க்குக் கப்பலேறினுர். ஆனுல் அங்கும் 3 வருட காலம் வறுமையும் ஏமாற்றமுந்தான் அவரை வாட்டி வதைத்தன. "ஜன நெருக்கமிக்க பம்பாயின் நடைப் பாதைகள் பேசுந் திறன் பெற்றிருந்தால், அவை, ஒவ்வொரு நாள் காலையிலும் கால் நடையாகவே ஒரு இளைஞன் தமது எளிய இல்லத்திலிருந்து புறப்பட்டு, கோட்டையிலுள்ள அலுவலகத்துக்கு நடந்து சென்றதையும், ஒவ்வொரு மாலையிலும் வேலை செய்த களைப்பினுலும், எதையோ எதிர்பார்த்து, கவலை தேங்கிய முகத்துடன் வீட்டுக்குத் திரும்பியதைப் பற்றியும் சாட்சியங் கூற முடியம்" என்று, ஜின்னுவின் காரியதரிசியாக இருந்த ஜனப் எம். எச். சையித் எழுதுகின்றுர்.

இந்த நூற்றுண்டு துவங்கியவுடன் ஜின்னுவின் அதிருஷ்டத்திலும் ஒரு திருப்பம் ஏற்பட்டது. அப்பொழுது பம்பாய் அட்வொகேட்-ஜெனரலாக இருந்த மோல்ஸ்வொர்த் மாக்பர்ஸன் என்பவர்

தம்முடைய காரியாலயத்தில் வேலை பார்க்கும்படி இந்த இளம் வழக்கறிஞரை அழைத்தார். இதைப்பற்றிக் கவியரசி சரோஜினி நாயுடுகூட மிகப் பெருமையுடன் எழுதியிருக்கின்றார். "இத்தகைய பெருமை ஒரு இந்தியருக்குக் கிடைத்தது, இதுவே முதல் தடவை" என்று அவர் எழுதியிருக்கிறார். ஆரம்பகால வாழ்க்கைப் போராட்டத்தில் ஜின்னாவைச் சூழ்ந்திருந்த காரிருள் துன்பத்திலே "இது ஒரு நம்பிக்கைப் பேரொளியாக விளங்கிய"தென்று ஜின்னாவும் நினைவு கூருகின்றார். இந்த மாக்பெர்ஸன் துரையின் சிபாரிஷின் மீதுதான் 1900-ம் ஆண்டில் ஜின்னாவுக்கு பம்பாய் மாகாண மாஜிஸ்டிரேட் உத்தியோகம் கிடைத்தது. இப்பொழுது ஜின்னாவின் வாழ்க்கைப் போராட்டம் ஒருவிதமாக முடிந்து விட்டது. தேவைக்குப் போதுமான பணம் சம்பாதித்தார். ஒரு நல்ல வீட்டில் குடி புகவும், ஒரு வண்டி வாங்கவும் தமது சகோதரி பாத்திமாவைக் கராச்சியிலிருந்து அழைத்துக்கொள்ளவும், பந்த்ரா கான்வெண்ட் பள்ளியில் அப்பெண்ணைச் சேர்த்து கல்வி கற்பிக்கவும் போதுமான வருமானம் அவருக்கு இருந்தது. அந்தக் காலத்தில் கான்வெண்ட் பள்ளியில் தங்கிப் படிப்பதை அவரது சமூகத்தினர் வெறுத்தார்கள். சகோதரி பாத்திமாவை அந்தப் பள்ளியில் சேராமல் தடுப்பதற்குப் பெருமுயற்சி நடந்தது. "மதம் போச்சு; மார்க்கம் போச்சு" என்ற கூச்சல்கள் கிளம்பின. அறியாத பெண் பாத்திமா, வைதீகர்களின் விஷமப் பேச்சுக்களுக்கும் தாக்குதல்களுக்கும் இலக்கானாள். இவ்வளவையும் எதிர்த்துநின்று தைரியமாகப் போராடித் தமது சகோதரிக்கு உற்சாக மூட்டி வந்தவர், பாத்திமாவின் சகோதரர் ஜின்னாதான்! ஜின்னா அவர்களே நேரில் சென்று தமது சகோதரியை கான்வெண்ட் பள்ளியில் சேர்த்தார். அவர் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் குதிரையின்மீது ஏறி பம்பாயிலிருந்து பந்த்ரா வரையில் சென்று தமது சகோதரியைப் பார்த்து வருவார்.

இந்த சகோதர, சகோதரிக்கிடையே ஒரு அரை நூற்றாண்டு காலம் நெருங்கிய உறவு முறை நிலைபெற்று வந்திருக்கிறது. "......நான் வீட்டுக்குத் திரும்பி வரும்போதெல்லாம், என் சகோதரியைப் பார்க்கும்போது எனக்கு நம்பிக்கையும், ஒளியும் அளித்து வந்தார். அவருடைய கட்டுப்பாடும் கண்டிப்பும் எனக்கு இல்லாமற் போயிருந்தால், எனது கவலைகள் மிக அதிகமாகி இருக்கும்; என் சுகாதாரமும் மிக மோசமாகியிருக்கும்" என்று ஜின்னா அவர்கள் பகிரங்கமாகவே கூறியிருக்கின்றார். குழந்தைப் பருவத்திலிருந்து, வெற்றிகரமான வாழ்வின் நாட்களை எய்தும் வரையில் ஜின்னாவுக்கு அவரது சகோதரி பாத்திமா, மிகவும் பாதுகாப்பு அளித்து வந்திருக்கிறார்.

* * *

பெரும்பாலும் ஜின்னாவின் உறுதியினாலும் தன்னம்பிக்கையாலும் தான், இந்தியாவும் பாக்கிஸ்தானும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்தன. ஆயினும், பம்பாயிலுள்ள வயோதிக ஹிந்து சமூக வழக்கறிஞர்கள், அவரை மிகவும் மரியாதையாகவே நினைவு கூருகின்றனர்.

பம்பாய் நகரின் மத்தியில் ஒரு உயர்ந்த கட்டிடம். இக்கட்டிடத்திலுள்ள ஒரு அறையில்தான் 1900 நவம்பரில் ஜின்னா தமது வக்கீல் தொழிலைத் துவங்கினார். இங்குள்ள மற்றொரு அறையில் ஒரு வயோதிக மனிதர் உட்கார்ந்திருக்கிறார். அவர் தம்முடைய காரியாலயத்தில் ஜின்னா முதல் முதலாக வேலைக்கு வந்து சேர்ந்த நிகழ்ச்சியை நினைவு கூருகின்றார். ஜனாப் ஜின்னாவின் ஆரம்ப கால வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதற்கு அவருக்கு மிகவும் விருப்பமாயிருந்தது. அவர் சொன்னார்; "ஜின்னாவின் ஆரம்ப காலக்

கதை உங்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். ஸர் சார்லஸ் ஓலிவண்ட் என்பவர் 1500 ரூபாய் மாதச் சம்பளத்தில் ஒரு நிரந்தர உத்தியோகம் தருவதாக ஜின்னாவிடம் கூறியபோது, அவர் அதனை மறுத்துவிட்டார். "ஒவ்வொரு நாளும் 1500 ரூபாய் நான் சம்பாதிக்கலாமென்று நம்புகிறேன்" என்று ஜின்னா அவரிடம் கூறினார். இது உண்மையாகவே நிகழ்ந்தது. அவர் தமது வக்கீல் தொழிலில் நன்கு நிலைபெற்ற பிறகு பம்பாயிலுள்ள வேறு எந்த வழக்கறிஞரையும் விட அதிகமாகவே அவர் சம்பாதித்தார்.

இந்த வக்கீல் தமக்குப் பக்கத்தில் இருந்த ஒரு காரியாலயத்திலிருந்து இரண்டு நண்பர்களை வரவழைத்தார். இந்த மூன்று பேர்களும் ஜின்னாவைப் பற்றி அவர்களுக்குத் தெரிந்த கதைகளைக் கூறினர். இவர்களில் இரண்டாவது மனிதர் ஜின்னாவைப் பற்றிக் கூறியபோது அவருடைய ஏழ்மையான நிலையில் அவரைக் கண்டதாகத் தெரிவித்தார். "ஆனால், அவருடைய உடைகள் அந்தக் காலத்திலும் அவருடைய தனித் தன்மையை எடுத்துக் காட்டுவனவாகவே இருந்தன. வருவாய்க் குறைவான அந்தக் காலத்தில்தான் அதிக சுதந்தர புத்தியுடன் அவர் நடந்து கொண்டார். அவரைப்போல் நாணயமாக நடப்பது மிகவும் கடினம். அவர் ஏதேனும் ஒரு அநியாயம் செய்ததாகவோ, அல்லது ஒளிவு மறைவாக நடந்துகொண்டதாகவோ நான் கேள்விப்பட்டதில்லை. அவ்வாறு நடப்பது அவருடைய இயற்கையான தன்மையிலுமில்லை."

மூன்றாவது வக்கீல் கூறினார்: "ஜின்னாவின் அதிருஷ்டத்தில் எப்படி உண்மையான திருப்பம் ஏற்பட்டதென்பது உங்களுக்குத் தெரியுமா? 1903ல் முனிசிபல் கார்ப்பரேஷன் தலைவராயிருந்தவர் ஒரு ஸ்காட்லாந்தியர். அவர் பெயர் மேக்டனால்டு. அவர் மிகவும் முக்கியமான மனிதர். பம்பாய் கார்ப்பரேஷனைச் சேர்ந்த எல்லா வேலைகளையும் அவரே நிர்வகித்து வந்தார். இக்காலத்தில் ஒரு பெரிய வழக்கு நடைபெற்று வந்தது. நீதிமன்றத்தில் ஏராளமான கூட்டம்! நீதிமன்றத்தின் கதவுகளெல்லாம் சார்த்தப்பட்டன. நீதிமன்றத்தின் உள்ளே வழக்கறிஞர்களுக்காக ஒரு தனி இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கே ஜின்னா வந்து சேர்ந்தார். அவரைப்பற்றி அக்காலத்தில் யாருக்கும் தெரியாது. அவர் உட்காருவதற்காக அங்குமிங்கும் இடம் தேடினார்; கிடைக்கவில்லை. வழக்கறிஞர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நாற்காலிகளுள் ஒன்றில் ஜேம்ஸ் மாக்டனால்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டபோது, அவருடைய இடத்தைக் காலி செய்யும்படி ஜின்னா கூறினார். ஆனால் மாக்டனால்டு மறுத்துவிட்டார். உடனே ஜின்னா அவர்கள் கோர்ட் கிளார்க்கிடம் சென்று, மாக்டனால்டை அப்புறப்படுத்தும்படி வற்புறுத்தினார். ஆனால் கிளார்க்



நியூ நஹாம் ரோடில், ஜின்னா பிறந்த இடம்

தயங்கினர். ஜின்ஞ அவரை விட்டு விடவில்லை. நீதிபதியிடம் அப்பீல் செய்யப்போவதாக பயமுறுத்தினர். அதன் பிறகுதான், பாவம், அந்த இளார்க் மாக்டனல்டிடம் சென்று, அவருடைய இடத்தைக் காலி செய்து ஜின்ஞவிடம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார். மாக்டனல்டு ஒரு புதுமையான மனிதர். அவர் கோபமடைவதற்குப் பதிலாக தமது நாற்காலியைக் காலி செய்து, ஜின்ஞவிடம் கொடுத்துவிட்டு, அவருடைய பெயர் என்னவென்று கேட்டார். உடனே அவர் 1000 ரூபாய் மாதச் சம்பளத்தில் கார்ப்பரேஷன் வழக்குகளை நடத்துவதற்காக ஜின்ஞவை நியமித்து விட்டார்!

மூன்ருவது வக்கீல் இக்கதையைக் கூறிக்கொண்டேயிருந்த போது இரண்டாவது வக்கீல் இடைநடுவே குறுக்கிட்டுக் கூறினர்: "ஜின்ஞ தம்முடைய திறமையில் கொண்டிருந்த நம்பிக்கை நம்மால் நம்ப முடியாததாக இருந்தது. அவர் ஒரு விஷயத்தைத் திருப்பித் திருப்பிக் கூறியபோது அதைக் கேட்டுக் கொண்டிருந்த மாஜிஸ்ட்ரேட் ஆத்திரமடைந்து, 'மிஸ்டர் ஜின்ஞ! நீங்கள், இங்கே ஒரு மூன்ருவது வகும்பு மாஜிஸ்ட்ரேட்டிடம் பேசிக்கொண்டிருக்கவில்லை என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்!' என்ருர். இதற்கு ஜின்ஞ கூறிய பதில் என்னவென்பதைப்பற்றி நீங்கள் படித்திருக்கலாம். அவர் அந்த மாஜிஸ்ட்ரேட்டை நோக்கி, 'நீங்கள் ஒரு மூன்ருவது வகுப்பு வக்கீலுக்கு முன்னிலையில் பேசிக் கொண்டிருக்கவில்லை என்பதை உங்களுக்கு நான் எச்சரிக்கின்றேன்' என்று சுடச்சுட பதில் கூறினர்.

இரண்டாவது வக்கீல் மீண்டும் தமது கதையைத் துவக்கினர்; "ஜின்ஞ ஒரு பெரிய வக்கீலாகத் திகழ்ந்தார். அவரை ஒரு வழக்கறிஞர் என்று சொல்வதை விட வாதாடுவதில் வல்லவர் என்று கூறலாம். ஒரு வழக்கின் உண்மைகளை அவர் புரிந்துகொண்டு விட்டால், சட்ட சம்பந்தமான வாக்குவாதத்தில் அவரை யாரும் வெல்ல முடியாது. இறைவனே அவரை அப்படி ஆக்கினன்! அவர் தாமாகவே தம்மை ஆக்கிக்கொள்ளவில்லை. ஆண்டவன்தான் அவரையொரு மாபெரும் வக்கீலாகப் படைத்தான். அவரிடம் ஒரு ஆருவது அறிவுத்திறன் இருந்தது. மனிதர்களின் மனத்தில் மறைந்திருப்பவைகளையும் அவரால் காண முடிந்தது. அவருடைய திறமைகளுக்கெல்லாம் இதுதான் காரணம். அவர் கூறுவதை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், அவர் ஒரு தெளிவான சிந்தனையாளர் என்பதை அறியலாம். தாம் சொல்வதைப் பிறர் புரிந்து கொள்ளுமாறு மெதுவாகவும், ஒவ்வொரு வார்த்தையாகவும் தெளிவாக எடுத்துக் கூறினர். அவர் கூறுவதனைத்தும் தூய தர்க்கவாதமாகவே இருந்தன."

முதல் வக்கீல் மற்ருெரு கதையைக் கூறினர். "அந்தக் காலத்தில் ஜின்ஞவைவிட இளையவரான வக்கீல் ஒருவர் இருந்தார். அவர் பெயர் எம். ஏ. சொம்ஜீ. பிற்காலத்தில் இவர் ஒரு ஹைகோர்ட் நீதிபதியாக விளங்கினர். இவரும் ஜின்ஞவும் ஒரு வழக்கில் எதிரெதிரே வாதாட ஒப்புக்கொண்டிருந்தனர்." இவர்களின் வழக்கு ஒரு நாள் திடீரென விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இச்சமயத்தில் சோம்ஜீ வேருெரு கோர்ட்டில் ஆஜராகியிருந்தார். ஆதலால் அவருடைய உதவி வக்கீல், மேற்படி வழக்கை, ஒரு குறுகிய கால அளவுக்கு ஒத்திப்போடுமாறு கேட்டுக்கொண்டு, ஜின்ஞவையும் அதற்கு இசையுமாறு வேண்டினர். ஜின்ஞ மறுத்துவிட்டார். ஆனல் சோம்ஜீயின் துணை வக்கீல்நீதிபதியிடம்அப்பீல் செய்து கொண்டார். ஜின்ஞ ஒப்புக்கொள்ளவில்லை. அவர் எழுந்து நின்று, "கற்றறிந்த எனது நண்பர், முன்னதாகவே இதனை எதிர்பார்த்திருந்திருக்க வேண்டும். வழக்கை

ஓத்திவைப்பதற்கு என்னிடம் நேரி லேயே அவர் கேட்டிருக்கவேண் டும்'' என்று கூறினர்.

''ஜின்னுவிடம் காணப்பட்ட அகம் பாவ புத்தி, வேறொரு குறைவான திறமையும் தன்னம்பிக்கையும் உள் ளவரிடம் இருந்தால் அவரை அது அடியோடு அழித்துவிட்டிருக்கும். பிறரைத் துச்சமாக மதித்து நடத் தும் ஜின்னுவின் குணத்தை நம் முள் சிலர் வெறுக்கின்றோம். ஆனுல் அவருடைய வாதத் திற மையை எவரும் மறுக்க முடியாது.

நீதிமன்றத்தில் நீதிபதியை நோக் கியவண்ணம் மெதுவாக எழுந்து, ஒற்றை மூக்குக் கண்ணுடியை அணிந்துகொண்டு அவர் எழுந்து நிற்கும்போது ஒரு திறமையுள்ள நாடக நடிகரைக் காண்பது போலவே கம்பீரமாக இருக்கும்.

அந்த மூன்ருவது வக்கில் மீண் டும் கூறினர்: ''ஜின்னுவின் பெரு மைக்கு அவருடைய நாணயமும் ஒரு முக்கிய காரணம்'' ஒரு கட் சிக்காரர் அவரை அணுகியபோது அவ்வருடைய வழக்கை நடத்து வதற்கு அவரிடம் ஒரு குறைந்த அளவு பணமே இருப்பதாக ஜின் னுவுக்குத் தெரிய வந்தது. ஆயி னும் அவ்வழக்கை நடத்துவதாக ஜின்னு ஒப்புக்கொண்டார். அந்த வழக்கு தோற்றுப்போய் விட்டது. ஆனுல், அந்த வழக்கில் வெற்றி பெற முடியும் என்று ஜின்னு நம்பி னுர். ஆகையால், அப்பீல் கோர்ட் டுக்குச் செல்ல வேண்டுமென்று அவர் சொன்னுர். அந்தக் கட்சிக்கா ரரிடம் அறவே பணம் கிடையாது என்பதை ஜின்னுவின் உதவி வக் கில் மீண்டும் நினைவுறுத்தினர். தம்மைப் பொறுத்த வரையில் பணமில்லாமலேயே வழக்கில் வாதாடுவதாக உறுதிமொழி கூறி னுர். அப்பீல் செலவில் சிறிது தொகையை உதவி வக்கில் தமது கையிலிருந்தே செலவிட வேண்டு மென்று அவர் வற்புறுத்தினர். வழக்கு அப்பீல் செய்யப்பட்டு ஜின்னுவும் வெற்றி யடைந்தார். ஆனுல், உதவி வக்கீல ஜின்னு வுக்குப் பணம் கொடுத்தபோது அதனை அவர் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். அதற்கு அவர் கூறிய காரணம் என்னவென்ருல், பணமில்லாமலே அந்த வழக்கை நடத்துவது என்ற நிபந்தனையின் மீதுதான் அதனை அவர் ஏற்றுக் கொண்டாராம்!

இதைப் போன்ற மற்ருெரு கதையை இரண்டாவது வக்கீல் கூறினுர். ஜின்னுவின் உதவியைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்த கட்சிக்காரர் ஒருவர், தாம் ஒப்புக் கொண்ட பணத்தைவிட அதிக மான தொகையை அவருக்கு அனுப்பினுர், அத் தொகையை ஜின்னு தமது கட்சிக்காரருக்கே திருப்பி யனுப்பிவிட்டார். அத்து டன் ஒரு குறிப்பும் வரைந்தனுப்பி னுர்.

'' நீங்கள் இவ்வளவு...தொகை அனுப்பினீர்கள், எனக்குச் சேர வேண்டியது இவ்வளவு...மிச்சம் இவ்வளவு...''

நான் இந்த மூன்று வழக்கறிஞர்க ளையும்நோக்கி,''நீங்கள் உண்மையி லேயே ஜின்னுவைப் போற்றுகிறீர் களா? அல்லது உங்களில் யாரா வது ஒருவர் அவரை அதிகம் விரும்பினீர்களா'' என்று கேட்ட போது, அவர்களுள் ஒருவர் ''ஆம்! அவருடைய நியாய புத்திக்காக அவரை நான் உண்மையிலேயே விரும்பினேன். அரசியல் வாழ்க் கையில் அபிப்பிராயபேதமும் மனக்கசப்பும் இருப்பினும் அவர் ஒரு கெட்ட எண்ணமில்லாத மனி தர் என்று நான் நம்புகிறேன். கடினமானவராக இருக்கலாம். ஆயினுர், பிறருக்குத் தீங்கிழைக் கும் தன்மை அவரிடமில்லை''

ஜின்னுவைப் பற்றிப் பேசிய வக் கீல்களுள் இருவர் ஹிந்துக்கள். ஒருவர் பார்ஸீ வகுப்பைச் சேர்ந் தவர். பின்னர் ஒருநாள், ஒரு பிர பல முஸ்லிம் பாரிஸ்டர், வழக்கறி ஞர் தொழிலில் ஜின்னு எப்படி விளங்கினுர் என்பதை மேலும் கவர்ச்சிகரமாகத் தெரிவித்தார்.

அவர் சொன்னார். "ஜின்னா தமது தொழிலை ஆரம்பித்த காலத்தில் அவர் ஒருவரே முஸ்லிம் பாரிஸ்டராக இருந்தார். மற்றும் ஒன்றிரண்டு பேர்கள் இருந்திருக்கலாம். ஆனால், அவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக இல்லை. இத்தொழிலில் பெரும்பான்மையும் ஹிந்துக்களும் பார்ஸீகளுமே ஈடுபட்டிருந்தனர். வியாபார சமூகத்திலிருந்து வழக்கறிஞர் தொழிலுக்கு வருகின்ற ஒரு முஸ்லிமைப் பார்த்து, அக்காலத்தில் குறை கூறப்பட்டு வந்தது. ஜின்னாவின் வாழ்க்கையில் உல்லாசம் கிடையாது. அவருடைய வேலையைத் தவிர வேறு விஷயங்களில் அவருக்கு அக்கறையில்லை. இரவு பகல இரண்டு வேளையும் அவர் தமது தொழிலிலேயே ஈடுபட்டிருந்தார். அவரை நான் இன்னமும் காண முடியும். காணல் குச்சியைப்போல் ஒல்லியாகவும் எப்பொழுதும் அவசர அவசரமாகவும் கடுமையான தோற்றத்துடனும் அவர் இருப்பதை நான் கண்டேன். அவருடைய அந்தரங்கப் பழக்கவழக்கங்களைப்பற்றி எப்பொழுதும் யாரும் சந்தேகித்ததோ கற்பனை செய்து பேசியதோ கிடையாது. இளமையில் மிகவும் கடினமாக அவர் வேலை செய்தார். துறவற வாழ்க்கை நடத்தினார். வக்கீல் என்ற முறையில் ஜின்னாவின் சட்ட ஞானத்தை விட வாதத்திறமையும் வாக்கு வன்மையுந்தான் சிறந்து விளங்கின என்று சொல்லப்படுகிறது. வாதந்திறமை இல்லாத வக்கீல்கள் தங்களைவிட பெயர் போன வழக்கறிஞர்களை 'சட்ட ஞானம் இல்லாதவர்கள்' என்று குற்றஞ் சாட்டுவது எளிது. ஆனால், ஜின்னா தமது சட்டத்தை நன்கு அறிந்திருந்தார்.

"ஜின்னாவின் முறைகள் சில சமயம் புதுமையாக இருக்கும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஒரு நாள் நீதிபதியொருவர் ஜின்னாவைப் பார்த்து. 'மிஸ்டர் ஜின்னா! நீங்கள் பேசுவதை நாங்கள் கேட்க முடியவில்லை!

'நீங்கள் பணம் செலவு செய்யும்போதெல்லாம் அது ஒரு அவசியமான, மிகவும்இன்றியமையாத செலவுதானா இல்லையாவென்பதை இரண்டு முறை யோசித்துப் பாருங்கள்!'

—காயிதெ ஆஸம்
முஹம்மது அலீ ஜின்னா

உரக்கப் பேசுங்கள்" என்று சொன்னார். உடனே ஜின்னா, "நான் ஒரு நடிகன் அல்ல; பாரிஸ்டர்!' என்று விடையிறுத்தார். நீதிபதி பொறுமையாகத்தான் இருந்தார். ஆனால் அவர் மீண்டும் குறுக்கிட்டு, "மிஸ்டர் ஜின்னா! இன்னும் உரத்த குரலில் பேசும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்" என்றார். இதற்கு ஜின்னா, "உங்களுக்கு முன்னால் இருக்கின்ற புத்தகக் குவியலை அப்புறப்படுத்தி விட்டால் நான் சொல்லுவதை நீங்கள் கேட்க முடியும்" என்று பதிலளித்தார்.

இம்மாதிரி பல கதைகளை நான் சொல்ல முடியும். அவருடைய ஆழ்ந்த நாணயமும் நேர்மையுந்தான் இத்தகைய முரட்டுத் தனத்துக்குக் காரணம் என்று நான் நினைக்கின்றேன்."

"ஹாஜி அப்துல் கரீம் என்பவர் ஒரு பிரபல வியாபாரி. அவர் ஒரு பெரிய குற்றம் சாட்டப்பட்டு, நீதிமன்றத்துககு அழைக்கப்பட்டிருந்தார். அவர் ஜின்னாவிடம் சென்று, தமது வழக்கை ஏற்று நடத்துவதற்கு என்ன செலவாகும் என்று கேட்டார். நாள் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய்" என்று ஜின்னா பளிச்சென்று சொன்னார்.

அந்த வியாபாரி மிகவும் முன் ஜாக்கிரதையுள்ள மனிதர். ஆகவே அவர், "அந்த வழக்கு எவ்வளவு காலம் நடைபெறும்? என்னிடம் ஐயாயிரம் ரூபாய் இருக்கின்றது. வழக்கை முடித்துக்கொடுப்பதற்கு மொத்தமாக இத்தொகையை ஒப்

புக் கொள்ளுவீர்களா?" என்று கேட்டார். இதற்கு மறுமொழியாக ஜின்னா கூறினார்: "இத்தொகையை ஏற்க நான் தயாராயில்லை. நாள் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய்தான் என் கூலி. இந்த நிபந்தனைக்கு நீங்கள் ஒப்புக்கொண்டால் சரி. இல்லாவிட்டால் வேறு ஒரு வழக்கறிஞரைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி விட்டார். ஆனால் அவருடைய நிபந்தனைகளை அப்துல் கரீம் ஏற்றுக் கொண்டார்.

மூன்றே நாட்களில் அந்த வழக்கை ஜின்னா ஜயித்துக் கொடுத்து விட்டார். இதற்காக அவர் (நாள் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதம் மூன்று நாட்களுக்கு) ஆயிரத்தை நூறு ரூபாய்தான் பெற்றுக் கொண்டார்.

இந்த பாரிஸ்டர் மற்றொரு சம்பவத்தைக்கூறி, தமது கதையை முடித்தார்: "ஜின்னா ஆஜரான ஒன்றிரண்டு வழக்குகளில் நான் ஒரு மாஜிஸ்ட்ரேட்டாக இருந்து தீர்ப்பு வழங்கியதுண்டு. ஆயினும், அவரைவிட நான் பல ஆண்டுகள் வக்கீல் தொழிலில் ஜூனியர். ஜின்னாவின் குடும்பத்துக்கு எனது தந்தை உறவினராயிருந்தார். என்னுடைய வாழ்க்கையின் துவக்கத்தில் இங்லாந்திலிருந்து நான் பம்பாய்க்குத்திரும்பிய போது என்னை என்தந்தை ஜின்னாவிடம் அழைத்துச் சென்றார். 'இதோ என் மகன் வந்திருக்கிறான்! அவனை உங்களைப் போல் திறமையுள்ளவனாக ஆக்கி விடுங்கள்" என்று தகப்பனார் சொன்னார். அதற்கு ஜின்னா அளித்த பதில் குறிப்பிடத்தக்கது: "உங்கள் மகன் என்னிடம் வந்து வேலை செய்யலாம். ஆனால், அவன் தன்னைத்தானே தான் திறமையுள்ளவனாகச்செய்து கொள்ள வேண்டும்" என்று என் தந்தையிடம்அவர் கூறினார்!"

★ ★

1940 டிஸம்பர் 25-ந் தேதியன்று முஹம்மது அலீ ஜின்னாவின் 64-வது பிறந்த தினம் நாடெங்கும் கொண்டாடப் பெற்றது. இந்த [illegible] ஒல்லியாகவே இருந்தது. இளம் வயதில் இருந்தது போலவே இப்பொழுதும் அவர் விரைப்பாகவும் சுறுசுறுப்பாகவும் நடந்தார். அநேகமாக எல்லா முஸ்லிம்களுக்கும் இப்பொழுது அவருடைய பெயர் ஒரு நம்பிக்கையொளியாக விளங்கியது. படித்த மக்கள் மட்டுமின்றி, எழுத்தறிவில்லாத பாமரர்களும் "காயிதெ ஆஸம்" ("மாபெருந் தலைவர்") என்றே அவரை அழைத்தனர்.

அன்று எல்லா மதங்களையும் சேர்ந்த எண்பத்து மூன்று தலைவர்கள் அவருக்குப் புகழ் மாலைகள் சூட்டினர். அப்பொழுது, "அவர் முஸ்லிம்களின் சொந்த சொத்தல்ல. இந்தியாவே பெருமைப் படக்கூடிய மனிதர்" என்று டாக்டர் ஸி. ஆர். ரெட்டி என்னும் ஹிந்துத் தலைவர் எழுதினார். "அவர் ஒரு சக்திவாய்ந்த பேச்சாளர். முதல்தர ராஜதந்திரி, மக்களின் தலைவர், அச்சமில்லாதவர், விலைக்கு வாங்க முடியாதவர்" என்று ஸர் பிரடெரிக் ஜேம்ஸ் என்னும் கிறிஸ்துவத் தலைவர் எழுதினார்.

"ஜின்னா ஒரு பிரத்தியட்ச தேசபக்தர். தமது நாட்டு அரசியல முன்னேற்றத்தின்மீது அவர் கொண்டுள்ள ஆர்வத்தில் வேறு யாருக்கும் சளைத்தவரல்ல" என்று ஸர். ஆர். கே. ஷண்முகம் செட்டி—மற்றொரு ஹிந்துத் தலைவர் எழுதினார். சட்ட மன்றங்களில் ஜின்னா வேலையின்றி வாழ்க்கைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த ஆரம்ப காலத்தில் அவரையறிந்திருந்த ஸர் கவாஸ்ஜி ஜஹாங்கீர் என்னும் பார்ஸி வகுப்புத் தலைவர் ஜின்னாவின் உறுதி தளராத 'சுதந்தரபுத்தி, தைரியம், விடா முயற்சி' ஆகிய குணநிசயங்களைப்பற்றிக் கூறினார், "தமது நாட்டின் நன்மைகளை இரண்டாவதாகவும், சொந்த நலன்களை முதலாவதாகவும் அவர் கவனித்ததேயில்லை" என்றும் அவர் தெரிவித்தார். ★

மாலையில் கல்லூரி விட்டதும் சைக்கிளில் ஏறி வீட்டுக்குப் புறப்பட்டான் சுலைமான். அவன் வாய், சினிமாப் பாட்டொன்றை முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

வழியில் பத்திரிகைகள் விற்கும் கடையில் பார்வையைச் செலுத்தினான். வண்ண அட்டையுடன் தொங்கும் அன்று வந்த சினிமாப் பத்திரிகை அவன் கவனத்தைக் கவர்ந்தது. புன்முறுவல் பூத்த முகத்துடன் அட்டையில் காட்சியளித்த அழகி, "பத்திரிகையில் ஒன்றுமில்லாவிட்டாலும் எனக்காகவாவது - வாங்கு!" என்று வற்புறுத்துவதைப்போல் உணர்ந்தான். உடனே சென்று அதனை வாங்கினான்.

சைக்கிளில் சாய்ந்தபடியே பக்கங்களைப் புரட்டினான். ஒரு பக்கத்தில் ஒரு நடிகை, இடுப்பை ஆட்டி நாட்டியமாடிக் கொண்டிருந்தாள். வேறொன்றில் ஒருத்தி சோகமே ஒருவாகி, செயற்கைக் கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள். மற்றொன்றில் ஒரு நடிகன் உருவிய வாளை ஓங்கிய வண்ணம், "இந்தத் தகர வாளால் என் படங்களில் எத்தனை பேரை 'டணார், டணார்' என்று வெட்டாமல் வீழ்த்துகிறேன் தெரியுமா?" என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தான்!

பத்திரிகையை எடுத்துக் கொண்டு சைக்கிளில் மீண்டும் ஏறிப் புறப்பட்டான் சுலைமான்.

அவன் வெகு தூரம் செல்லவில்லை. இளைஞர் அனைவரும் மணந்து கொள்ளத் துடிக்கும் பேரழகி 'மிஸ் மசாலா' நடிக்கும்

நிறைவு

'கண்ணாமூச்சி' என்ற படத்தின் விளம்பரம் ஒரு சுவரில் ஒட்டப் பட்டிருந்தது. அதன் அழகில் இலயித்துப் பார்த்துக்கொண்டே சென்றவன், எதிரே வந்துகொண் டிருந்த கிராமக் கிழவியைக் கவனி யாமல் அவள் மீதுசைக்கிளை ஏற்றி விட்டான்.

இருவரும் கீழே உருண்டனர்.

நல்ல வேளை! கிழவிக்கு அதிகக் காயம்படவில்லை. அவள் எழுந்து தூசியைத் தட்டிக்கொண்டே கிரா மிய பாஷையில் "நீ நாசமாய்ப் போக! குட்டிச் சுவராய்ப்போக" என்று காரசாரமாகத் திட்டத் தொடங்கினாள். சுலைமான் "தப் பித்தேன், பிழைத்தேன்" என்று தூசியைக்கூடத் தட்டாமல் சைகி ளில் ஏறிக் காற்றாய்ப் பறந்தான்.

அவன் வீட்டுக்குள் நுழையும் போது நெஞ்சு, 'படபட'வென்று அடித்துக் கொண்டிருந்தது.

தன் அறையில்சென்று ஆடைக ளைக் களைந்து கொண்டிருந்தான். அவன் தாய் ஹாஜரா மலர்ந்த முகத்துடன் உள்ளே வந்தாள்.

"சுலைமான்! வீட்டில் யார் வந்தி ருக்கிறார்கள், பார்த்தாயா?" என் றாள் ஹாஜரா.

"யார் வந்திருக்கிறார்கள்?" என்று கேட்டான் சுலைமான்.

"உன் மாமா மகள், 'பல்கிஸ்' வந்திருக்கிறாள், நீ அவளைப் பார்த்து இரண்டு ஆண்டுகள் ஆகி விட்டன. பூப்பெய்திய பின் இந்த இரண்டு ஆண்டுகளில் அவள் எவ்வளவு மாறியிருக்கிறாள் தெரி யுமா? அவளை அடையாளமே

கண்டுகொள்ள முடியவில்லை. உன்னுடன் ஓடியாடி விளையாடிக் கும்மாளம் போடுகிறவள், இப்போது நீ வருவதைக் கண்டதும் நாணிக் கோணி என் அருகில்வந்து. தலையில் துணியைப் போட்டுக்கொண்டு உன் பெயரைக்கூடச் சொல்ல வெட்கப்பட்டு "மச்சான் வர்ராக" என்று கூறினாள்...உம் ...என்னமோ......நீ பீ. ஏ. பாஸ் பண்ணியவுடன் உங்கள் இருவருக்கும் ஒரு முடிச்சுப்போட்டு விட்டால் என் மனப்பாரம் நீங்கிவிடும். நிம்மதியாக 'அல்லாஹ்' என்று கண்ணை மூடிவிடுவேன்".

"அம்மா! அந்த முடிச்சுப் போடவும் வேண்டாம்; நீ கண்ணை மூடவும் வேண்டாம்"

"ஏண்டா! அப்படிச் சொல்லுகிறாய்?"

"நீ நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். வேறொன்றும் இல்லை." என்று கூறிக்கொண்டே சோப் பெட்டியை எடுத்துக் கொண்டு முகம் கழுவப் பின்புறத் தோட்டத்திலுள்ள கிணற்றுக்குச் சென்றான் சுலைமான்.

ஹாஜரா தேநீர் கொண்டுவரச் சென்றாள்.

கிணற்றருகே புறாக்களுக்குத் தீனி போட்டுக்கொண்டிருந்த பல்கீஸ். சுலைமான் அங்கு வருவதைக் கண்டதும் தலையில் முக்காட்டைப் போட்டுக் கொண்டு திரும்பி நின்று கொண்டாள்.

"யார்? பல்கீஸா? எப்போது வந்தாய்?... அடேயப்பா! வெட்கத்தைப் பார்! மூக்கு நுனி தெரிகிறது. முக்காட்டை இன்னும் இழுத்து விட்டுக்கொள்! பெரிய மனுஷியாகி விட்டாயல்லவா?" என்றான் சுலைமான்.

பல்கீஸ் பேசவில்லை. வேண்டுமென்றே முக்காட்டை மிக நீளமாக இழுத்து விட்டுக்கொண்டாள்.

"அட டூர்! பேசாவிட்டால் போ!" என்றுகூறி சுலைமான் முகம் கழுவத் தொடங்கினான். மாடப்புறா ஒன்று 'படபட'வென்று பறந்து வந்து அவன் தலையில் உட்கார்ந்தது.

அதைத்தள்ளிவிட்டு, சுலைமான் திரும்பிப் பார்த்தான். பல்கீஸ் 'களுக்'கென்று சிரித்துவிட்டு வீட்டுக்குள் மறைந்தாள். அவள் குறும்புதான் இது என்பதை சுலைமான் புரிந்துகொண்டான்.

கை கால்களைச் சுத்திசெய்து கொண்டு தன் அறையில் வந்து உட்கார்ந்தான். தேநீர்க் கோப்பையுடன் ஹாஜரா உள்ளே வந்தாள். கோப்பையை மகன் முன் மேஜைமீது வைத்துவிட்டு 'பல்கீஸைப் பார்த்தாயா? எப்படி இருக்கிறாள்?" என்றாள்.

சுலைமான் முகத்தைச் சுழித்து, "அவள் நகையும்! புடவைக் கட்டும்! அசல் குறத்திமாதிரி இருக்கிறாள்!" என்றான்.

'ஏண்டா, அவள் அழகுக்கென்ன? மூக்கும், முழியுமாய் நன்றாயிருக்கிறாள். நாகரிகமாக ஆடை அணியவில்லை; நகைகள் போட்டுக் கொள்ளவில்லை என்றால் நீ சொல்லிக் கொடுத்து நாகரிகப்படுத்திக் கொள்! தாய் தந்தையருக்கு ஒரே பெண், கண் போல் வளர்க்கிறார்கள், பணம். குணம் இரண்டுமுண்டு. உனக்கு நிக்காஹ் செய்துவைக்க வேண்டும் என்பதற்காகவே அவள் தாய், பல்கீஸ் என்று தன் மகளுக்குப் பெயர் வைத்தாள், நீங்களும் சிறு வயதிலிருந்து அன்புடன் தானே பழகி வருகிறீர்கள்! அவளுக்குக் கொடுக்காமல் நீ எதையும் தின்னமாட்டாய். அவள் தன் பங்கையும் தின்றுவிட்டு உன் பங்கையும் தட்டிப் பறித்துக் கொண்டு ஓடி விடுவாள். நாங்கள் அவளை அதட்டினால், நீ தடுத்து சிரித்துக் கொண்டிருப்பாயே!"

"ஆம், அம்மா! சிறுவயதில் கூடி விளையாடினால், காதல்

கொள்ளவேண்டும்; கலியாணம் செய்து கொள்ளவேண்டும் என்பது சட்டமா? இப்போதும் அன்பு இருக்கிறது. காதல் இல்லையே!

காதல் இல்லாத கலியாணம் இறைச்சியில்லாத பிரியாணியைப் போன்றது. காதல், வாழ்வின் நிலவொளி; ஊடல், வாழ்வின் இனிய சங்கீதம். இவையின்றி நான் யாரையும் மணந்து கொள்ளமாட்டேன். பல்கீஸ் சுத்த கர்நாடகம் மட்டுமன்று; தற்குறியுங்கூட. அர்த்தந் தெரியாமல் ஆடி ஆடி அரபி ஓதத் தெரியுமே யொழிய வேறு ஒரு எழுத்தும் தெரியாது. பி. ஏ. படித்த உன் மகன் நான்கு பேருடன் பழகத் தெரியாத தற்குறியையா மணந்து கொள்வது? எனக்கு நாகரிகமான படித்த பெண் தேவை. அப்போதுதான் மனநிறைவு ஏற்படும். இந்த விஷயத்தில் வற்புறுத்தாதே அம்மா!" என்று அழுத்தமாகக் கூறினான் சுலைமான்.

ஹாஜரா, மூக்கு முனையில் விரல் வைத்தவண்ணம் சிலையாக நின்று விட்டாள். இத்தகைய பிரசங்கத்தைத் தன் மகனிடமிருந்து கனவிலும் எதிர்பார்த்ததில்லை. ஒன்றும் கூறத் தோன்றாதவளாய் அறையை விட்டு வெளியேறினாள்.

சுலைமான், கதவைத் தடாலென்று சார்த்திக்கொண்டு தேநீரை அவசர அவசரமாகத்தொண்டைக்குள் கொட்டிக் கொண்டான். கூரையைப் பார்த்த வண்ணம் படுக்கையில் படுத்தான்.

அவன் சிந்தனை சிறகை விரித்து மேலே மேலே பறக்கத் தொடங்கிற்று.

"யார் மீது காதல் ஏற்படுகிறதோ அவளையே கலியாணம் செய்து கொள்ள வேண்டும். விதி, விளையாட்டுப் பொம்மை ஆக்கிக் கொள்ள விடக்கூடாது. நெஞ்சுரமற்றவனுக்குத்தான் விதி, மண்ணாங்கட்டி எல்லாம்" என்று கருதினான்.

"என் காதலியே! நீ எங்கிருக்கிறாய்? எனக்காக யாராவது ஒருத்தி பிறந்துதானே இருக்க வேண்டும்! எந்த ஊரில், எந்த வீட்டில் வளர்கிறாய்? உன்னை எங்கே? எப்போது? எப்படிச் சந்திப்பேன்?

"சினிமாவில் நேருவதுபோன்ற சம்பவம் நிகழவேண்டும். என் காதலியைச் சந்திக்க வேண்டும். தோட்டத்தில் ஆடிப்பாடிக் களிக்க வேண்டும். என் காதலி கோஷாப் பெண்ணா? கோஷாவிலிருந்து விடுதலையடைந்த பெண்ணா? கோஷாப் பெண்ணாயிருந்தால் எப்படிக் காண்பேன்? எப்படிக் காதலிப்பேன்? அந்தோ! இந்தப் பாழும் கோஷா முறை ஏன் இருக்கிறது?" என்று தனக்குள் கூறிக் கொண்டே படுக்கையில் புரண்டான்.

★ ★

சுலைமான், அந்த ஆண்டில் பீ.ஏ. பரீட்சை எழுதினான். விடுமுறை கழிந்தபின் பத்திரிகைகளில் பரீட்சை முடிவு வெளியாயிற்று. ஆவலுடன் பத்திரிகையைப் பிரித்துப் பார்த்தான். அவனுக்கு முந்திய எண்ணும், பிந்திய எண்ணும் இருந்தன. அவன் எண் காணப்படவில்லை. மகன் தோல்வியைக் கேட்டு ஹாஜரா மனமுடைந்து போனாள்.



சுலைமான், தோல்வியுற்ற பாடங்களைப் பிரத்யேகமாய்ப் படித்துப் பரீட்சை எழுதுவதற்காக சென்னை சென்று, அங்கொரு பிரத்யேகப் போதனைக் கல்லூரியில் சேர்ந்தான்.

அவன் சென்னையில் பாடங்கள் மட்டும் படிக்கவில்லை. தன் காதலியையும் தேடத் தொடங்கினன்! அங்குதான் தனக்கேற்ற முற்போக்குள்ள பெண்கள் இருப்பார்கள் என்பது அவன் எண்ணம்.

முதன் முதலில் ஒரு பெண்ணைப் பார்த்தான். அவன் மனம் எப்படி எப்படியோ ஆகத் தொடங்கிற்று. தனக்குக் காதல் ஏற்பட்டுவிட்டதென்று கருதினன். ஆனல் அவளோ சுலைமானைத் திரும்பிப் பார்க்கவும் இல்லை. "சிறு பார்வை இன்பங்கூட கொடுக்க மறுக்கும் கஞ்சப்பெண் அவள்!" என்று பொருமினன். பிறகு அவளைப் பற்றி விசாரித்ததில் அவளுக்கு ஏற்கனவே விவாகம் ஆகிவிட்டதென்று தெரிந்தது! அவன் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. "அட அல்லாஹ்! என்னைச் சந்திக்குமுன் இவள் ஏன் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமோ!" என்று அங்கலாய்த்தான். பிறகு அவளை மறந்தான்.

அவன் படித்துக் கொண்டிருந்த போதனைக் கல்லூரியில், எஸ்.எஸ்.எல்.ஸி.யில் தோல்வியுற்று அவனைப் போலவே படிக்க வந்தாள் சல்மா. அவளுடைய இரட்டைச் சடையும், மூக்குக் கண்ணாடியும், நவநாகரிக உடையும் சுலைமானின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

சல்மாவின் தந்தை சென்னையில் ஒரு வியாபாரி. அவர்கள் வீட்டில் கோஷா முறையே கிடையாது. ஆகையால் சுலைமான் தாராளமாக சல்மா வீட்டுக்குப் போய்வரத் தொடங்கினன். சீக்கிரமே அவன் சல்மா வீட்டு மனிதர்களில் ஒருவன் ஆகிவிட்டான்.

சல்மாவுக்குத் தாய் தந்தையரும் ஒரு அண்ணனும் உண்டு. தந்தையும் அண்ணனும் வியாபாரத்தைக் கவனித்து வந்தனர். சுலைமானுக்கு ஏதோ கொஞ்சம் நிலபுலம், வீடு வாசல் உண்டு; பீ. ஏ. படிக்கிருன் என்பதையும், தந்தையில்லாதவன், தாயின் பராமரிப்பில் வளர்ந்து வருகிருன் என்பதையும் அறிந்து அன்புடனே பழகினர். ஆனல் சல்மாவுடன் அதிகமாக நெருங்கிப் பழக அவனை அனுமதிக்கவில்லை. ஜாக்கிரதையாகவே இருந்தனர். சுலைமான் போய் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு வந்து விடுவான்.

செப்டம்பர் மாதம் வந்தது. சல்மாவும், சுலைமானும் பரீட்சை எழுதினர். சல்மா தேறிவிட்டாள். சுலைமான் மீண்டும் ஒரு பாகத்தில் தோல்வியுற்ருன். அது அவனுக்குத் தாங்கொணு வருத்தத்தைக் கொடுத்தது.

நாட்கள் உருண்டோடின.

ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை, சுலைமான், சல்மா வீட்டுக்குச் சென்ருன். அங்கே ஒரு புதிய இளைஞன் சல்மாவின் அண்ணனுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தான். அவனுடைய பேச்சைக் கேட்டு ரசித்துச் சிரித்துக்கொண்டிருந்தாள் சல்மா.

வழக்கத்துக்கு மாருக அன்று யாரும் சுலைமானை வரவேற்கவும் இல்லை; உட்காரும்படிச் சொல்லவும் இல்லை. சுலைமான் தயங்கிக் கொண்டே காலியாகக் கிடந்த நாற்காலியில்போய் உட்கார்ந்து கொண்டான். அது அவனுக்கு வேதனையளித்தது.

கொஞ்ச நேரம் பேசியிருந்துவிட்டு. அவ்விளைஞன் போய்விட்டான். அவனை வாசல் வரை சென்று சல்மாவும், அவள் அண்ணனும் வழியனுப்பி வந்தனர்.

'திருதிரு'வென்று விழித்துக் கொண்டு வீற்றிருந்த சுலைமானிடம் சல்மாவின் அண்ணன் வந்து, "அவர் பெயர் ஹபீப், எம். ஏ. பீ. எல்., வக்கீல் தொழிலில் நல்ல வருவாய்! அவருக்குத் தான் சல்மாவை நிக்காஹ் செய்யத் தீர்மானித்திருக்கிறோம்" என்ருன்.

சுலைமானின் தலையிலே பேரிடி விழுந்தது போல் இருந்தது. அவன் தலை சுழன்றது.

நிமிர்ந்து பார்த்தான். அங்கே சல்மா இல்லை. உள்ளே போய் விட்டாள்.

சுலைமான் எழுந்து, சல்மாவின் அறைப் பக்கம் காலடி எடுத்து வைத்தான். சல்மாவின் அண்ணன் தடுத்து, "இனி அவளை அடிக்கடி சந்திக்க வேண்டாம். இன்னொருவருக்குச் சொந்தமாகி விட்டாள்" என்றான்.

சுலைமானின் கண்களிலே தீப் பொறி பறந்தது. முறைத்துப் பார்த்துவிட்டு 'விருக்'கென்று அங்கிருந்து வெளியேறினான்.

அன்றிரவு சுலைமான் தூங்கவே யில்லை. படுக்கையில் புரண்டு கொண்டே கிடந்தான்.

மறுநாட் காலை விடிந்ததும் பிச் சுவா ஒன்றை எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு ஆவேசத்து டன், இரண்டில் ஒன்று சல்மாவை யே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று புறப்பட்டான்.

அவன் சல்மா வீட்டுக்குள் நுழை யும்போது சல்மாவின் தந்தையும், அண்ணனும் உட்கார்ந்திருந்தனர். அவர்களுக்காக சல்மா தேநீர் கொண்டு வந்துகொண்டிருந்தாள்.

திடீர் என்று சல்மா முன் போய் நின்றான் சுலைமான். "நீ யாரை மணந்துகொள்ளப் போகிறாய்?" என்று கோபத்துடன் கேட்டான்.

அவனுடைய அலங்கோலமான நிலைமையும், கோபமும் சல்மா வுக்கு அச்சத்தை யூட்டின. ஆயி னும், தந்தையும், அண்ணனும் இருப்பதால் தைரியமடைந்து "ஹபீபைத்தான்" என்றாள்.

"என்னிடம் பழகியதெல்லாம் எதற்காக? இப்படி மோசம் செய்து என் வாழ்வைப் பாழாக் கவா?" என்று கர்ஜித்தான் சுலை மான்.

"உங்களை நன்கு அறிந்துகொள் வதற்காகப் பழகினேன். எனக் குப் பிடிக்கவில்லை. ஆகையால் வேறு நல்ல காதலரைத் தேடிக் கொண்டேன். இதில் தவறு ஒன் றும் இல்லையே!

"நீங்கள் உங்கள் மாமன் மகள் பல்கீஸுடன் பழகினீர்கள். உங்க ளுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் வேறு ஒரு நல்ல பெண்ணைத் தேடி வந்தீர்கள். ஆணுக்கு மட்டும் நல்ல காதலியைத் தேடும் உரிமையிருந் தால் பெண்ணுக்கு மட்டும் நல்ல காதலரைத் தேடும் உரிமை இல் லையா? உங்கள் மீது காதல் கொண்டுவிட்டதாக நான் எப்போ தும் சொல்லவில்லையே! இப்போ தும் உங்களிடம் அன்பு இருக்கி றது. சகோதரனைப் போலவே பாவிக்கிறேன்" என்றாள் சல்மா.

"நான் உன் சகோதரனா?" என்று ஆத்திரத்துடன்கூறி இடுப் பில் இருந்த பிச்சுவாவை, உருவி அவள் நெஞ்சுக்கு நேராகஉயர்த்தி னான் சுலைமான். சல்மா, திடுக்கிட் டுத் தேநீர்க் கோப்பைகளைக் கீழே போட்டு விட்டுப் பின்னடைந் தாள்.

இவ்வளவும் ஒரு நிமிஷத்தில் நடந்தேறின.

உடனே ஆபத்தை உணர்ந்து சல்மாவின் தந்தையும் அண்ண னும் எழுந்துஓடிவந்து,சுலைமானைப் பிடித்தனர். சல்மாவின் அண்ணன், சுலைமான் கையிலிருந்த பிச்சுவா வைப் பிடுங்க முயன்றான். சுலை மான் திமிறி, அவன் தலையில் ஓங் கிக்குத்தினான். அடுத்த கணம்,மண் டையிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய்ந்தது. 'ஆ! ஊ' என்ற கூச் சல் கிளம்பிற்று. சல்மா கதறினாள். சல்மாவின் தாயும் ஓடிவந்து கூச்ச லிட்டாள். வெளியிலிருந்து ஆட் கள் 'திமுதிமு'வென்று ஓடிவந்த னர். சுலைமானைக் கட்டிப் பிடித்துக் கொண்டனர். சீக்கிரமே அவன் அனைவராலும் நன்கு புடைக்கப் பட்டு ஒரு தூணில் கட்டப்பட் டான்.

சில விநாடிகளில் போலீஸார் உள்ளே நுழைந்தனர். கொலை செய்ய முயன்றதாக, இந்தியன் பினல்கோடு 307 ஆவது பிரிவுப் படிகுற்றம்சாட்டி, சுலைமானை அழைத்துச் சென்றனர். அவன் பாது காவலில் வைக்கப்பட்டான்.

செய்தி அறிந்த சுலைமானின் தாய், ஹாஜரா துடிதுடித்தாள். தன் அண்ணனும், பல்கீஸின் தந்தையுமான முஹம்மத் யாஸீனை அழைத்துக் கொண்டு, சென்னை வந்து சேர்ந்தாள்.

வழக்கு நடந்தது. சுலைமான் பயங்கரமான ஆயுதத்தால் ஆழமான காயத்தை உண்டுபண்ணியதாகவும், கொலை செய்ய முயன்றதாகவும் போலீஸார் வாதித்தனர். சுலைமானின் தரப்பில் இரண்டு வக்கீல்கள் வாதித்தும் பயன்படவில்லை. நீதிபதி சுலைமானின் மீது இரக்கம் காட்டித் தண்டனையை மட்டும் குறைத்து மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதித்தார்.

ஹாஜராவும், முஹம்மத் யாஸீனும் கண்ணீரும் கம்பலையுமாய் சுலைமானைச் சிறையில்வந்து கண்டு போனார்கள். ஹாஜரா பேரதிர்ச்சியடைந்தாள். அவள் ஊருக்குப் போனது முதல் அன்ன ஆகாரமே உட்கொள்ளாமல் நோய்வாய்ப் பட்டாள். அண்ணன் யாஸீனும், பல்கீஸும், ஹாஜராவை மிகவும் கவனித்தனர். ஆனால் பயன்படவில்லை. ஒரு ஆண்டு கழிந்தது. ஹாஜரா கண்ணை மூடி விட்டாள். பல்கீஸின் முகத்தைப் பார்த்துக் கண்ணீர் வடித்துக் கொண்டே அவள் ஆவி துறந்தாள்.

தாய் இறந்த செய்தியைச் சிறையில்கேட்ட சுலைமான் 'கோ' வென்று கதறி அழுதான். அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடும் போல் இருந்தது. அவனுடைய மாமனார் முஹம்மத் யாஸீன் அடிக்கடி வந்து அவனுக்கு ஆறுதல் கூறிப் போனார்.

தண்டனைக் காலம் முடிந்து சுலைமான் வெளியில் வந்தான். ஊருக்குப்போக ரயிலேறினான். ரயிலில் அவன் சிலைபோல் உட்கார்ந்திருந்தான். அன்று முஹம்மத் யாஸீன் வந்து அழைத்துப் போவதாகக் கடிதம் எழுதியிருந்தார். ஏன் வரவில்லை? என்று சிந்தித்துக்கொண்டிருந்தான்.

அவ்வேளையில் பலமான இரு கரங்கள் அவன் தோள்களைக் குலுக்கின. சுலைமான் தலை நிமிர்ந்து பார்த்தான். தன்னுடைய கல்லூரிப் பேராசிரியர் எதிரே நிற்பதைக் கண்டான்.

உடனே எழுந்து, "வாருங்கள் ஸார்! உட்காருங்கள் ஸார்!" என்றான்.

பேராசிரியர் அவன் எதிரே பலகையில் அமர்ந்தார்.

"சுலைமான்! உன் மாமனார் முஹம்மத் யாஸீன் காய்ச்சலாகப் படுத்திருக்கிறார். உன்னை வந்து அழைத்துப் போவதாகச் சொல்லியிருந்தாராம். முடியவில்லை. என்னை அனுப்பி வைத்தார்."

உன் மாமனார் மூலம் உன் கதை முழுதும் தெரிந்தேன். உன்னைப் போல் எத்தனையோ இளைஞர்களைக் கண்டிருக்கிறேன். எல்லோரையும் போலவே நீயும் தவறு செய்திருக்கிறாய். காதல் என்பதையே என்னவென்று புரிந்து கொள்ளாமல் தற்கால யுவர்களும், யுவதிகளும் 'காதல்', 'காதல்' என்று அலைகிறார்கள். உண்மைக் காதல் இலக்கிய ஏடுகளில் காணப்படுகிறதேயொழிய நடைமுறையில் இல்லை. தமக்கு ஏற்படும் மோகத்தையே காதல் என்று நினைத்து இளைஞர்கள் மோசம் போகிறார்கள்" என்றார் பேராசிரியர்.

இதைக் கேட்டதும் சுலைமானுக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"அப்படியானால் நான் கொண்டது காதல் இல்லையா?" என்று கேட்டான் சுலைமான்.

"இல்லை. ஒருகாலும் இல்லை" என்று தொடர்ந்தார் பேராசிரியர்,

"காதல் எப்படிப்பட்ட பெண் வேண்டும் என்று முன்கூட்டிச் சிந்திக்காது; படித்த நாகரிகப் பெண்ணோ வேண்டும் என்று கோராது யார் மீதாவது உண்டாகிவிடும். காதலை, மனிதன் வாய்க்கால் வெட்டிச் செலுத்த முடியாது.

"இப்படிப்பட்ட பெண் தான் தேவை என்று நீ விரும்பியபோதே நீ காதலை ஒதுக்கி விட்டாய். ஒரு லட்சியப் பெண்ணையே நாடினாய். முதன் முதலில் சந்தித்த பெண் மணமானவள் என்று தெரிந்ததும் அவளை மறந்தாய், நீ சல்மாவைக் காதலித்ததாகக் கருதினாய். காதலி எத்தகைய துரோகம் செய்தாலும் அவளைக் குத்திக் கொலை செய்யக் காதல் இடம் தராது. உண்மைக் காதலின் இலக்கணத்துக்கு அது முற்றிலும் மாறுபட்ட செயல். உண்மைக் காதல் இன்பமல்ல; தியாகமேயாகும்" என்று முடித்தார் பேராசிரியர்.

"ஆமாம் சார்! தற்போது சல்மா மீது வெறுப்புத்தான் இருக்கிறதேயொழிய விருப்பு இல்லை" என்றான் சுலைமான்.

"பார்த்தாயா! இந்த நிலை உண்மைக் காதலுக்கு ஏற்படாது. காமத்திலிருந்து காதலைப் பிரிப்பது மிகவும் கடினம். இக்காரணம் பற்றியே காதல் மலிந்த மேனாட்டில் விவாக விலக்கும் பெருகியிருக்கிறது. நேற்று மணம், இன்று விலக்கு நடப்பதும் உண்டு. புதிதாகப் பழகும்போது மோகமே மேலோங்கி நிற்கும். குற்றங்குறைகள் கண்களுக்குப் படா. கலியாணமாகி மோகம் தணிந்தபின் திரை விலகும். சண்டை சச்சரவுகள் பெருகும். கடைசியில் விவாக விலக்கில் போய் முடியும்" என்று விளக்கினார் ஆசிரியர்.

இருவரும் பேசிக்கொண்டே சென்றனர். ஊர் வந்ததும் இறங்கினார்கள். குதிரை வண்டியொன்றில் ஏறிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார்கள்.

வண்டி கொஞ்ச தூரம் சென்றிருக்கும். வழியில்படுத்துக் கொண்டிருந்த நாயைக் காப்பாற்ற வண்டியை ஓரமாக ஓட்டினான் வண்டிக்காரன். சக்கரம் ஒரு பெரிய கல் மீது ஏறவே வண்டி குடை சாய்ந்தது.

தெய்வாதீனமாகப் பேராசிரியர் காயமின்றித் தப்பினார். சுலைமானுக்குத் தலையில் பலமான காயம் பட்டது. அவன் மூர்ச்சையடைந்தான்.

சுலைமானின் வீட்டில்தான் அவனுடைய மாமனார் முஹம்மத் யாஸீனும், பல்கீஸும் இருந்தனர். சுலைமான் அங்கு கொண்டுபோகப் பட்டான். டாக்டர் வந்து சுலைமானுக்குத் தகுந்த சிகிச்சை செய்து போனார்.

சுலைமான் மூர்ச்சை தெளிந்தான். பல்கீஸின் குரல் தலைப் பக்கம் கேட்டது.

"அல்லாஹ்! வெகு நாட்களாகப் பிரிந்திருந்த அவரை, மண்டையில் காயப்படுத்தியா என்னிடம் சேர்க்க வேண்டும்? இப்படி உணர்வற்றுக் கிடக்கிறாரே! நான் என்ன பாவம்செய்தேன்? என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? என் உயிரை வேண்டுமானால் எடுத்துக்கொள். அவர் உயிரைக் கொடு! அவருக்காக அரும்பாடு பட்டுப் படித்துக் கொண்டேன். ஆடை அணிகளையும் மாற்றிக் கொண்டேன். இவ்வளவு பரயாசையையும் வீணாக்கி விடாதே! 'சென்னையிலிருந்து திரும்பி வந்ததும் மாறுபட்டிருக்கும் உன்னை நிச்சயம் கலியாணம் செய்து கொள்வான் என் மகன். நீதான் அவனைப் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று என் மாமி ஹாஜரா மரணத் தறுவாயில் கூறினாரே. அவர் வாக்கைப் பொய்யாக்கி விடாதே" என்ற வார்த்தைகள் சுலைமானின் காதுகளில் ஒலித்தன.

சுலைமானின் உள்ளம் உருகிவிட்டது, புறஅழகில் மயங்கி அக

அழகைக் காணத்தவறிய தன்னை நொந்து கொண்டான் தன்னையு மறியாமல்—'பல்கீஸ்!' என்றான்.

அக்குரல் சொர்க்கத்திலிருந்து வரும் ஹூர்களின் இனிய கீதத் தைப்போல் பல்கீஸின் காதுகளில் ஒலித்தது. அவள் உடம்பு சிலிர்த் தது. நாணம் அவளைக் குன்றச் செய்தது. அல்லாஹ் அவ்வளவு சீக்கிரம் அவள் பிரார்த்தனையை நிறைவேற்றி விடுவான் என்று எதிர்பார்க்கவில்லை.

பரபரப்புடன் எழுந்து, சுலைமா னின் பார்வையில் தன் பார்வை யைப் பதித்தாள். இதயத்தோடு இதயம் கலந்தது. இருவரும் வெகு நேரம் அப்படியே இருந்தனர். நெஞ்சுகள் விம்மின.

சுலைமான் எழுந்து உட்கார்ந் தான்.

"பல்கீஸ்! என்னை மன்னித்து விடு! உன்னை நன்கறியாமல் உன் மனத்தைப்புண்படுத்தி விட்டேன். அதற்குத் தக்க தண்டனையும் பெற் றுக் கொண்டேன். உன்னை நான் வெறுத்தும் நீ என்னை வெறுக்கா மல் இருந்தாயே! எனக்காக உன்னை மாற்றிக் கொண்டாயே! இதுவன்றோ உண்மைக் காதல்! இப்போதே நிக்காஹ் செய்து கொள்ளச் சித்தமாயிருக்கிறேன்" என்றான் உணர்ச்சியோடு.

பல்கீஸ், தனது காலின் பெரு விரல்களை நோக்கிய வண்ணம், "நான் இப்போது அசல் குறத்தி மாதிரி இல்லையே?" என்று கேட் டாள் குழைவுடன்.

சுலைமான் சிரித்து விட்டான். "போக்கிரி! இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாயே! இப்போது அசல் சொர்க்கத்து ஹூர் மாதிரி இருக்கிறாய்!" என் றான்.

இச்சமயம், "இன்ஷா அல் லாஹ், சீக்கிரமே நிக்காஹ் செய்து விடுவோம்" என்ற குரல்கேட்டு இருவரும் திடுக்கிட்டனர். காய்ச்ச லாகப் படுத்துக்கிடந்த பல்கீஸின் தந்தை முஹம்மத் யாஸீன் சிரித் துக்கொண்டே பின்னால் நின்று கொண்டிருந்தார். 'பாவா!' என்று போய்த் தந்தையின் கால் களைப் பிடித்துக் கொண்டாள் பல் கீஸ். "போய்ப் படுத்துக் கொள் ளுங்கள் பாவா! மருந்துகொண்டு வருகிறேன்" என்றாள்.

"எனக்கு இனி மருந்துவேண் டாம். நீங்களே என்னை குணப் படுத்தி விட்டீர்கள்" என்றார் முஹம்மத் யாஸீன்.

மூவரும் மன நிறைவு பெற்ற னர்.

அன்றுதான் மெய்யான மன நிறைவு பெற்றதை சுலைமான் உணர்ந்தான். ★★

குரங்கைப் பாருங்கள்!

எனக்கு ஒரு கதை ஞாபகமிருக்கிறது. சிம்லாவில் உள்ள ஜாக்கோ குன்றுகளுக்கு ஒரு முறை ஜின்னா விஜயம் செய்தார். சட்டைப் பைகளில் கொஞ்சம் கடலைகளை எடுத்துக்கொண்டு சிம்லாவின் குன்றுகளில் உலாவப் போனார். அங்கே வசிக் கின்ற குரங்குகளிடம் அக்கடலைகளை எறிந்தார். அந்தக் குரங்கு களில் ஒன்றுகூட, கடலையினிடம் வரவில்லை. பின்னர் ஒரு மரத்திலிருந்து வயதான பெரிய குரங்கு ஒன்று இறங்கி வந்து, தரையில் இறைந்துகிடந்த கடலைகளை நோக்கிச் சென்றது. உடனே மற்றக் குரங்குகளும் தங்களின் தலைமைக் குரங்கைப் பின்பற்றி ஓடின. தலைமைக் குரங்கு கடலையைச் சாப்பிடுகிற வரையில் மற்றக் குரங்குகளும் சாப்பிடவில்லை. இக்கதையை ஜின்னா சொல்லி முடிந்தவுடன், "குரங்குகளிடம் கூட ஒரு ஒழுங்கு முறை காணப்படுவதைப் பார்த்தீர்களா" என்று அவர் கூறினார்.

–மஸ்ஹர் அஹ்மத், (ஜின்னாவின் கடற்படை மெய்க்காப்பாளர்.)

நான் அறிந்த இஸ்லாம்

14

★

எஸ். சுந்தரமூர்த்தி

பெண்ணின் பெருமையும் உரிமையும்

விலங்குகளினின்றும் பெரிதும் வேறுபடாத காட்டுமிராண்டி நிலையிலிருந்த அரபு மக்களைப் புற வாழ்க்கையிலும், ஒழுக்கங்களிலும் உயர்வடையச் செய்து, நாகரிகத்தில் உயர்ந்த நிலையிலிருந்த பிறநாட்டு மக்களுக்குச் சமமான நிலைக்கு இஸ்லாம் உயர்த்திற்று. மக்களினத்தில் பாதியாகவுள்ள பெண்களின் நிலையை உயர்த்த இஸ்லாம் சிறப்பாக முயற்சித்தது. இஸ்லாம், மகளிர் முன்னேற்றத்திற்காகச் செய்தவைகளை நன்கு உணர வேண்டுமானால் இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு அரேபியாவில் பெண்கள் எந்த நிலையில் இருந்தனர் என்பதைத் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். அரபுகள் பெண்களைத் தனியான கீழான நிலையினர் என்று நினைத்தனர். ஆத்மா என்பதே அவர்களுக்குக் கிடையாது என்று நினைத்து வந்தனர். ஒருவன் வாழ்க்கைக்கு வேண்டிய பிற பொருள்களை விலை கொடுத்தோ, வாரிசு முறையாகவோ பெறுவதைப்போலவே பெண்களையும் கருதினர். பெண்கள் அடிமைகளைப்போலவே நடத்தப்பட்டனர். அவர்களுக்கு சொத்துரிமை அறவே இல்லாதிருந்தது. ஒரு பெண் தன் தந்தையின் பொருளிலும், கணவனுடைய பொருளிலும் அவர்கள் இறந்த பின் எதையும் அடைய முடியாத நிலையில் இருந்தாள். பெண்கள் பிறப்பதையே அரபுகள் இழிவானதாகக் கருதி வந்தனர். அதனால் பெண் குழந்தைகளில் தமக்கு வேண்டியவை போக மிகுதியை உயிருடன் புதைத்துவிடும் கொடிய வழக்கம் அவர்களிடம் இருந்து வந்தது. ஒருவன் பல மனைவியரை மணத்தலும் வழக்கமாக இருந்தது.

மிகத் தாழ்ந்த நிலையிலிருந்த பெண்களை எல்லாத் துறைகளிலும் உயர்வடையச் செய்தது இஸ்லாம். ஆண்களும் பெண்களும் பிறப்பிலும், இறைவனுடைய அருட் கொடைகளைப் பெறுவதிலும் சொத்துரிமையி

னும் சமமானவர்களே என்று பறை சாற்றிற்று. நபி பெருமானார் இவ்வாறு சொன்னார்கள்:— "ஆண்களும் பெண்களும் இரட்டைப் பிறவிகளே"; "அன்னையின் மலரடிகளிலேயே சுவர்க்கம் உள்ளது"; "ஒரு பெண் ஐந்து தடவை தொழுது, ரமலான் மாதத்தில் உண்ணு நோன்பு கடைப்பிடித்து, கற்புடையவளாகக் கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்துவரின், அவள் விரும்பிய வாயில் வழியாக சுவர்க்கத்தில் நுழையலாம் என்று அவளிடம் கூறுங்கள்"

"பெண்ணுரிமை புனிதமானது, பெண்களுக்களிக்கப்பட்ட உரிமைகளை அவர்கள் காப்பாற்றிக் கொள்ளுமாறு பார்த்துக் கொள்ளுங்கள்".

"விதவைகளை ஆதரித்துக் காப்பாற்றுக".

"பெண் குழந்தைகளுக்கு நன்மை செய்கின்றவர்கள் நரகத் தீயிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்"!.

"பெண்களை நன்றாக நடத்துமாறு ஆண்டவன் ஆணையிட்டுள்ளான். ஏனென்றால் அவர்கள் உங்களுடைய அன்னையராகவும், அருந்தவப் புதல்விகளாகவும், அத்தைகளாகவும் இருக்கின்றனர்."

பெண் குழந்தைகளை உயிருடன் புதையாமல், துன்புறுத்தாமல், அவற்றினிடையே வேறுபாடு காட்டாமல் இருக்கின்றவர்களை அல்லாஹ் சுவர்க்கத்தினுள் புகுத்துவான்".

"தன் மனைவியிடம் எவர் சிறந்தவராக இருக்கின்றாரோ அவர் தான் உங்களிற் சிறந்தவர்".

"மணமுறிவு (தலாக்) சட்டபூர்வமானதுதான்; ஆனால் கடவுளால் மிகவும் வெறுக்கப்படுவது".

"மகளிர் மஸ்ஜிதுக்கு வருவதைத் தடை செய்யாதீர்கள்".

"தன் கணவனால் மணமுறிவு செய்யப்பட்டு உங்கள் வீட்டுக்குத் திரும்பும் உங்கள் புதல்வியிடம் அன்புடன் நடந்து கொள்வதே சிறந்த நற்செயலாகும்".

மேற்கண்டவாறு நபிபெருமானார் கூறியதுடன், தம் வாழ்க்கையிலேயே அவ்வாறு வாழ்ந்து காட்டினார்கள். தமக்காக நஞ்சூட்டிய உணவைத் தந்த ஒரு பெண்ணை அவர்கள் மன்னித்துவிட்டார்கள். மற்றும் தம் குழந்தைப் பருவத்தில் செவிலித் தாயாக விளங்கிய ஒருவருக்காக வழக்கமாக எப்போதும் எழுந்து நிற்பார்கள். அத்துடன் அவர் அமரும் பொருட்டு ஒரு துணியையும் விரித்து வைப்பார்களாம்!

மேற்காட்டிய நாயகம் அவர்களின் திருவாக்குகளிலிருந்தும், செயல்களிலிருந்தும் பெண்கள் முன்னேற்றத்துக்காக அவர்கள் எவ்வளவு உழைத்தார்கள் என்பது தெற்றென விளங்கும்.

திருகுர்ஆனும் ஆண்களையும் பெண்களையும் சமமாகவே குறிப்பிடுகின்றது. ஆண்களைப்போலவே பெண்களுக்கும் இறைவன் ஞான வெளிப்பாடுகளை அருளியதாகக் கூறப்பட்டுள்ளது. (குர்ஆன், 28: 7, 20: 38, 3: 41) ஆண்களும் பெண்களும் சமமாகவே தம் தம் செயல்களுக்கேற்றபடி நன்மை தீமைகளை அடை

கின்றார்கள் என்பதை பின்வரும் திருமறை வாக்கியங்களால் அறியலாம்.

"ஆணாயினும் பெண்ணாயினும் எவருடைய நற்செயல்களையும் நான் வீணாக்காமல் அவர்களுக்குச் சிறந்த பரிசுகளை இம்மையிலும் மறுமையிலும் அளிக்கின்றேன்" (3: 195).

"நற்செயல்களைச் செய்வதுடன், நன்னம்பிக்கை உடையவர்கள் ஆணாயினும் பெண்ணாயினும் அவர்கள் நிச்சயமாக பேரின்பப் பூங்காவினுள் நுழைவர். ஒரு சிறிதும் அவர்கள் அநியாயமாக நடத்தப்பட மாட்டார்கள்" (4: 124).

"நன்னம்பிக்கையும், நற்செயல்களும் உள்ளவர்கள் ஆண்களாயினும், பெண்களாயினும் இன்ப வாழ்க்கையடையும்படி நாம் செய்வோம். அவர்கள் செய்த நற்செயல்களுக்கான பரிசை நாம் தவறாமல் அவர்களுக்கு அருள்வோம்" (16: 97)

இவையன்றி, இன்னும் பல இடங்களிலும், (திருமறை வாக்கியங்கள் 40: 40, 33: 35) ஆண்களையும் பெண்களையும் சமமாகவே நடத்துவதாக திருகுர்ஆன் அறிவிக்கின்றது.

மற்றும், பொருளாதாரத் துறையிலும் பெண்களை ஆண்களுக்குச் சமமானவர்களாகவே அறிவிக்கின்றது:

"ஆண்கள் தாங்கள் தேடிய பொருள்களின் பயனைப் பெறுவர். அவ்வாறே பெண்களும் தாங்கள் தேடிய பொருள்களின் பயனைப் பெறுவர்" (4: 32).

"தம் பெற்றோர்களும் நெருங்கிய உறவினர்களும் விட்டுச் செல்வதில் ஒரு பகுதியை ஆண்கள் பெறுவர். அதுபோலவே தம் பெற்றோர்களும் நெருங்கிய உறவினர்களும் விட்டுச் செல்வதில் ஒரு பகுதியைப் பெண்களும் பெறுவர்" (4: 5).

திருமண முறைகளிலும் பெண்களின் உயர்வும் தனித்தன்மையும் உறுதிப்படுகின்றது. திருமணத்திற்கு முன்பு மணமகன் மணமகளுக்குத் தரவேண்டிய அன்பளிப்பை (மஹரை)க் கொடுத்துவிட வேண்டும். அப்பணத்தை மணமகள் தான் விரும்பியபடியே செலவு செய்ய உரிமை பெற்றிருக்கின்றாள். அவளாக விரும்பி, மஹரின் ஒரு பகுதியைத் தன் கணவனுக்கு அளித்தால் மட்டுமே அவன் அதைப் பெறலாம். இஸ்லாம், பிற மதப் பெண்களை, அதாவது முன்னமே இறைவனுடைய சட்டங்களைப்பெற்ற கிறிஸ்தவர், யூதர் போன்றவர்களின் பெண்களை முஸ்லிம்கள் மணக்கலாம் என்று கூறுகின்றது. ஆனால் முஸ்லிம் பெண்கள் பிறசமயத்து ஆண்களை மணக்கலாம் என்று கூறவில்லை. இதன் காரணம் மிகத் தெளிவானதே. இஸ்லாம் பெண்களுக்கு அதிக உரிமைகளை வழங்கியுள்ளது. மற்ற சமயங்கள் அவ்வளவு உரிமைகளைப் பெண்களுக்கு அளிக்கவில்லை. எனவே பிறசமயப் பெண்களை முஸ்லிம்கள் மணப்பின், அப்பெண்கள் அதிக உரிமைகளுடன் இன்பமாக வாழ்வார்கள். ஆனால் முஸ்லிம் பெண்கள் பிற மதத்தினரை மணந்தால் தம் உரிமைகளை

இழக்க நேரிடும். அதற்காகவே பின்னது அனுமதிக்கப்படவில்லை.

மணமுறிவு முறைகளிலும் பெண்களுக்குத் தனியான மதிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கணவன் தன் மனைவியை விலக்க விரும்பினால் உடனே விலக்கி விடலாம். ஆனால் அவளைப் பற்றிக் குற்றச் சாட்டுக்களைக் கூற அவனுக்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. ஆனால் பெண்கள் தங்கள் கணவன்மாரிடமிருந்து மணமுறிவு பெறவிரும்பினால் சான்றோராகவுள்ள முதியவர்கள் முன்னிலையில் தம் கணவர்பாலுள்ள குறைகளை எடுத்துக் காட்டலாம். இதுபோன்ற உரிமையைக் கணவனுக்கு அளிக்காததன் காரணம், மணமுறிவுக்குப் பின்பு ஆண்கள் எளிதில் வேறு பெண்களை மணக்க முடியும் என்பதே! பெண்கள் தவறுகப் பெருங் குற்றங்கள் சாட்டப்பட்டால் பின்னர் வேறு ஆண்கள் அவர்களை மணக்க முன் வருதல் அரிது, இதனாலேயே பெண்கள் அதிக உரிமைகளையும் பாதுகாப்புக்களையும் அளிக்கப்பட்டுள்ளனர்.

பல மனைவியரை மணக்க இஸ்லாம் அனுமதிப்பதாகக் குறை கூறப்படுகின்றது. ஆனால் பகுத்தறிவின் துணைகொண்டு ஆராய்வோர்க்கு உண்மை விளங்காமற் போகாது. ஒரே மனைவியைத் தான் இஸ்லாம் போற்றுகின்றது. அவசியம் ஏற்பட்டால் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை, அதுவும் நான்குவரை கொள்ளலாம். ஆனால் அம்மனைவியர் அனைவரையும் சமமாக நடத்த முடியுமானால் மட்டுமே ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரைக் கொள்ளலாம். இவ்விதியினால் நன்மையடைவோர் பெண்களேயன்றி ஆண்கள் அல்ல. விதவைகளாகவும் அனாதைகளாகவும் ஆதரவற்று இருப்பவர்களுக்குப் பிறர் உதவிசெய்ய வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ஆண்களைவிடப் பெண்கள் அதிகமாக இருக்கும்போது இவ்வாறு அனுமதிக்கப்படாவிட்டால் விபசாரம்தான் அதிகமாகும். ஒழுக்கம் கெடும். சமூக வாழ்வு கெடாமல் இருப்பதற்கென்றே கட்டுப் பாட்டுக்கடங்கி ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணக்க இஸ்லாம் அனுமதிக்கின்றது.

இக்காலத்தில் இந்திய முஸ்லிம் பெண்களிடையே பெரு வழக்கிலுள்ள 'பர்தா' முறைக்குத் திருகுர்ஆனிலோ, நபிகள் நாயகத்தின் வாக்கியங்களிலோ சிறிதும் ஆதாரம் இல்லை. பெண்கள் வெளியில் செல்லும்போது தம் தலைகளை மறைத்துக் கொள்ளும் துணிகளால் மார்பகங்களையும் மறைத்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. அன்றியும் இயல்பாக மறைத்து வைக்கப்படாத முகம், கைகள் தவிர ஏனைய அங்கங்களை அணிகலன்களால் அழகுபடுத்தி வெளியில் காட்டவேண்டாம் என்றுதான் கூறப்பட்டுள்ளது (24: 30, 31) நபிகள் நாயகத்தின் நாட்களில் பெண்கள் முகமூடி இன்றியே கடவுள் வழிபாட்டுக்குச் சென்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

வயது வந்த பெண்கள் தங்களுடைய முகங்களையும் கைகளையும் தவிர்த்துப் பிற அங்கங்களைத் துணிகளால் மறைத்துக்கொள்ள வேண்டும் என்று நாயகம் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். இந்நாட்களில் வழங்கும் பர்தா முறை, பிற்காலத்தில் பாரசீகம் முதலிய நாடுகளிலிருந்து முஸ்லிம்கள் மேற்கொண்டதொன்றாகும்.

மேற்காட்டியவைகளிலிருந்து, பெண்களுக்கு இன்றியமையாத உரிமைகள் என்று இன்று நாம் எண்ணும் பல உரிமைகளையும் இஸ்லாம் பலநூற்றாண்டுகளுக்கு முன்பே அவர்கள் கேட்காமலேயே அவர்களுக்கு அளித்துள்ளமை நன்கு விளங்கும். அவ்வுரிமைகளுக்காக இன்றும் உலகத்தின் பல பகுதிகளில் வாழும் முஸ்லிமல்லாத பெண்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை அறிந்தால்தான் இஸ்லாம் பெண்களுக்கு அளித்துள்ள உரிமைகளின் பெருமையை நாம் உணர முடியும்.

அரிய தமிழ் நூல்கள்

எம். ஆர். எம். அப்துர் ரஹீம் எழுதிய நூல்கள்

வாழ்க்கையில் வெற்றி	2	8
முன்னேறுவது எப்படி?	2	8
வழிகாட்டும் ஒளிவிளக்கு	1	9
வாழ்வைத் துவங்கு	2	8
சுபிட்சமாய் வாழ்க!	2	8
கவலைப்படாதே!	2	8
வாழ்வது ஒரு கலை	2	4
பூங்குழலி	3	8
மகனே! கேள்!	2	0
அன்புள்ள தம்பி	2	0
உலக மேதைகள்	1	8
வெற்றி என் கைகளிலே	1	4
வியாபாரம் செய்வது எப்படி?	3	0
நபிகள் நாயகம் மலிவுப் பதிப்பு	3	0
நபிகள் நாயகம் பரிசுப் பதிப்பு	5	0
முஸ்லிம் சமுதாயச் சிற்பிகள்	2	0
லியோ டால்ஸ்டாய்	1	8

அல்ஹாஜ் பா. தாவூத்ஷா சாஹிப் எழுதிய

நபிகள் நாயக மான்மியம் (விரிவான வரலாறு) முதற் பாகம் ரூ.	12	0
ஜவாஹிருல் புர்கான் அம்மயத் (விரிவுரை)	2	8
அம்மயத் மொழி பெயர்ப்பு மட்டும்	1	8
இஸ்லாம் (5 கடமைகள் படங்களுடன்)	3	0
அல் ஹம்து ஸூரா (விரிவுரை)	1	0
திருமணமும் பிரிவினையும்	2	8
451 நாயக வாக்கியம் (ஹதீஸ்)	1	8
மஹான் முஹம்மது நபி (ஸல்) (சிறிய வரலாறு)	1	12
நாயகத்தின் நற்குணங்கள்	1	8
குத்பா பிரசங்கம்	3	4
பிரார்த்தனைகள் 99 (துஆ)	0	12

கிடைக்குமிடம் :

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை-1.

"அவிழ்க்க முடியாத அரசியல் சிக்கல்களை அவிழ்ப்பதிலும், மனிதர்களைச் சரியாக எடை போடுவதிலும் மாபெருந் திறமையுடைவர்".

மௌலானா அபுல் கலாம் ஆஸாத்

ராஜேந்திர குமார்

★

அதிகக் கல்வியறிவு பெற்றிருப்பதன் காரணமாக சாதாரணப் பொது மக்களுடன் நெருங்கிப் பழகவியலாத ஒரு தலைவர் மௌலானா அபுல் கலாம் ஆஸாத். ஆயினும், அவர் தமது முழு வாழ்க்கையையும் மக்களின் தொண்டிலேயே செலவிட்டிருக்கின்றார். அத்தொண்டில் அநேக கஷ்ட நஷ்டங்களையும் அவர் அனுபவித்திருக்கின்றார். 1916-ல் உலக யுத்தம் நிகழ்ந்து வந்தபோது மகாத்மா காந்தி அதில் ஒத்துழைத்து வந்தார், பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசத்துடன் நடந்து கொள்ளவேண்டும் என்று அவர் மக்களுக்கு உபதேசம் செய்தார். அப்பொழுது மௌலானா ஆஸாத் ஒரு கலகக்காராயிருந்தார். "அல ஹிலால்" எனும் பெயருடைய மௌலானாவின் பத்திரிகை, பிரிட்டிஷ் ராஜ்யத்தை எதிர்த்து நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தது. அரசாங்கத்துக்கு அது பெரிய தலைவலியாக விளங்கியது. இறுதியில் அதன் ஜாமீன் தொகை பறிமுதல் செய்யப்பட்டுப் பத்திரிகை ஆபீஸும் மூடப்பட்டது. அதற்குப் பின்னர் மௌலானா அவர்கள் 'ராஞ்சி' சிறையில் வைக்கப் பெற்றார்.

1888 நவம்பர் 11-ந் தேதியன்று அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் மக்காவில் பிறந்தார். கெய்ரோவில் அல் அஸ்ஹார் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டார். பதினைந்தாவது வயதிலேயே பாரசீக, அரபு மொழிகளில் அவருக்கு அதிகப் பாண்டித்தியம் ஏற்பட்டு விட்டது. அவருக்கு இளம் வயதிலேயே மதம் தத்துவம் ஆகிய இரண்டுவிதமான கல்வியறிவிலும் ஆழ்ந்த ஞானம் உண்டாகியிருந்தது. அவருடைய தந்தை ஒரு பெரிய கல்விமான். அவர் ஒரு மதத்தலைவராகவும் விளங்கினார். தந்தை இறந்தவுடன் அவருடைய தலைமைப் பதவியை ஆஸாத் ஏற்றுக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதற்குமாறாக அவர் முடிவு செய்து விட்டார். அது மிகவும் கண்ணியமும் பெருமையுமுள்ள பதவி என்பது தெரிந்திருந்தும் அதனை அவர் விரும்ப

வில்லை. மனிதர்களை "மிகவும் முக்கியமாக கவரக் கூடிய இரண்டு பொருள்கள், மதமும் அரசியலுந்தான்" என்று ஜார்ஜ் எலியட் கூறியுள்ளார். இந்த இரண்டிலும் ஆஸாத் அவர்களுக்கு அதிகப் பற்றுதல் உண்டு. இது அவருக்கு ஒரு அரிய கௌரவமாகும். இரண்டு துறையிலும் அவர் வியக்கத்தக்கவாறு செயலாற்றியுள்ளார்.

அபுல் கலாம் ஆஸாதின் குஞ்ச தாடியும், சிறு சிறுப்புள்ள ஊடுருவும் கண்களும் ஒளியை அள்ளி வீசுகின்றன. எல்லாருடனும் எல்லா காரியங்களிலும் கலந்து கொள்வதற்கு அவரால் இயல வில்லை. மௌலானாவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய மகாதேவ தேசாய் கூறுகிறார்: "படிப்பில் ஆழ்ந்துவிடும் அவருடைய குணம், ஒருவிதமான தனிமையை விரும்பச் செய்கிறது. பழகுவதற்கு அன்பும் மரியாதையும், மற்றவர்களுக்கு விட்டுக் கொடுக்குந் தன்மையும் உடையவர். ஆயினும் அவருக்கு மிகச் சில நண்பர்களே இருக்கின்றனர். மௌலானா அவர்கள் உரையாடுதலில் சிறந்த திறமையுடையவர். ஆயினும், அவரிடம் தன்னடக்கமும், தனக்குத் தெரிந்த விஷயத்தையும் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டிருந்துவிடுந் தன்மையும் இருக்கின்றன. எந்த விழாவையும் துவக்கி வைக்கவோ, அதற்குத் தலைமை வகிக்கவோ அழைக்கப் படும்போது மறுத்துவிடக் கூடிய மத்திய அரசாங்க மந்திரி மௌலானா ஒருவரே! எப்பொழுதாவது அவர் ஒரு பட்டமளிப்பு விழா சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கின்றாரா என்று நான் வியப்புறுகிறேன். 'அரசியல் வாதிகளுக்குப் பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் வழங்குதல் சரியல்ல' என்று அவர் கருதுகிறார்".

ஆஸாத் அவர்கள் அதிகாலையில் படுக்கையிலிருந்து எழுந்துவிடுகிறார். சீன நாட்டுத் தேநீரை அவர் மிகவும் விரும்பியருந்துகிறார். அவருக்கு விருப்பமுள்ள கூட்டாளிகள் கிடைக்காவிட்டால் தனிமையில் இருக்கவே விரும்புகிறார். அவரே இதைப்பற்றி எழுதியுள்ளார். "ஆரம்ப காலத்திலிருந்தே எனது குணம் தனிமையைத் தான் விரும்புவதாகவும், மற்றவர்களுடன் கூடிப் பழகுவதைத் தவிர்ப்பதாகவும் இருந்து வருகிறது".

நைனி மத்திய சிறையில் இருந்தபோது அவர் தம் காலை நேரத் தேநீரை அவரே தயாரித்துக் கொண்டார். வைகறையில் படுக்கையை விட்டு எழுந்து, ஆகாயத்தை நோக்கிய வண்ணம் காலை மலருவதையும் விண்மீண்கள் மறைவதையும் உற்று நோக்கிக் கொண்டே அதன் காட்சியை அனுபவித்து மகிழ்ந்தார். தேநீருடன் பாலைக் கலப்பதை அவர் வெறுத்தார். அஹமத் நகர் சிறையில் இருந்தபோது அவர் தமது நண்பர் ஒருவருக்குத் தேநீரைப் பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியுள்ளார்: "தேநீரைத் தேநீராகவே நான் உட்கொள்ளுகிறேன். ஆனால் மக்களோ பாலுக்காகவும்சர்க்கரைக்

ர்க்கவும் அதனைக் குடிக்கின்றனர்”.

நவாப் சாதார் யார் ஜங் பகதூர் மவ்லானா ஹபீபுர் ரஹ்மான் ஷெர்வானீ என்னும் பிகான்பூர் (அலீகர்) நண்பருக்கு ஆஸாத் அநேகக் கடிதங்கள் எழுதியிருக்கின்றார். அவைகளெல்லாம் புத்தகமாக பிரசுரமாகியிருக்கின்றன. இக்கடிதங்கள் பலவிதமான விஷயங்களைப்பற்றி எழுதப்பெற்றவை. படிப்பதற்கு மிகவும் இன்பகரமாக இருக்கின்றன. இவைகளைப் படிப்பவர்கள், ஆஸாத் அவர்களின் ஆழ்ந்த கல்வியறிவை ஓரளவு தெரிந்து கொள்ள முடியும்.

ஒரு சமயம் அபுல் கலாம் ஆஸாத் அவர்கள் அதிகம் கற்றறிந்த அறிஞர்களின் கூட்டத்தில் சொற்பொழி வாற்றுவதற்காகச் சென்றிருந்தார். அவர் அங்கே சென்றபோது, அந்தக் கூட்டத்தில் பேச இருப்பவர் அவர்தான் என்பதை ஒருவரும் நம்பவில்லை! அந்த அறிஞர்களின் கூட்டத்தில் பேசுவதற்காக வந்திருந்த ஒரு பெரிய அறிவாளியின் மகனாக அவர் இருக்க வேண்டும் என்று நினைத்தனர். ஆயினும் அவர் பேசுவதற்குத் துவங்கியவுடன் அவருடைய திறமான புலமையைக்கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தனர்!

ESTD : 1910. TEL : MAJESTIC.

ஆபரணங்களுக்குப் பன்மடங்கு பெருமையைக் கொடுப்பதும், அசல் வைரம் போல் ஜொலிப்பதும்

மெஜஸ்டிக் வைரங்களே!

இந்தியா முழுவதிலும் வெளி நாடுகளிலும் பிரக்யாதி பெற்றது!

MAJESTIC DIAMONDS. (Pro.) A. BAPOO SAHIB.

Factory No. 1. Madura Road Trichy.
Factory No. 2. Puttur High Road Tiruchy.

தயாரிப்பவர்கள் :
மெஜஸ்டிக் டைமண்டு ஒர்க்ஸ்,
பெரிய பஜார், திருச்சிராப்பள்ளி,
(S. INDIA.)

அபுல் கலாம் ஆஸாத் உண்மையில் ஒரு கவிஞர்தானா என்று ஒரு புத்தகக் கடையில் இருந்த மனிதருக்குச் சந்தேகம் உண்டாகி விட்டது. அவர் ஆஸாத் அவர்களை அநேக கேள்விகள் கேட்டார். மௌலானா சாஹிபுக்கு எரிச்சல் வந்து விட்டது. ஆனால் குழப்பமடையவில்லை. கேள்வி கேட்க வந்தவரின் அறை கூவலைமௌலானாஏற்றுக்கொண்டார்; சரமாரியாக கவிதையடிகளைப் பொழிந்து தள்ளினார்! மௌலானாவின் புலமையைச் சந்தேகித்துக் கேள்வி கேட்க வந்த மனிதர் மகிழ்ச்சியினால், "சுப்ஹானல்லாஹ், சுப்ஹானல்லா" என்று கூவிக்கொண்டே குதித்தார்!

அபுல் கலாம் ஆஸாத் இடைவிடாமல் புகை பிடித்துக்கொண்டிருக்கிறார். சங்கீதத்தின் மீது அவருக்கு அபாரப் பிரியம். அவர் எழுதும் கட்டுரைகளின் புனை பெயர் "ஆஸாத்" என்பது.

அதிகாலையில் எழுந்து குளிப்பது அவர் வழக்கம். தமது சிறு வயதில் பயங்கரப் புரட்சிகளில் அதிக விருப்பங் கொண்டிருந்தார். அவருடைய ஞாபக சக்தி வியக்கத் தக்கது. அவர் உடற் பயிற்சி செய்வது வழக்கமில்லை. தமது அறையிலேயே தங்கியிருப்பதை விரும்புகிறார். இவர் வேடிக்கை விளையாட்டுக்களைப் பார்க்கச் செல்லுவதே கிடையாது. இரவில் வெகு நேரம் சென்றபின் செய்யப்படும் விருந்துகளுக்கு அழைப்பு வந்தால் அதற்குப் பெரும்பாலும் அவர் செல்வதில்லை. ஒரு அறையிலேயே இருந்து சாப்பிட விரும்புகிறார். ஜனாதிபதியோ அல்லது பிரதம மந்திரியோ, யாருடைய விருந்தாக இருந்தாலும் சரி, அவைகளில் ஆஸாத் கலந்து கொள்வது மிகவும் அருமை. கடந்த ஐரோப்பியப் பிரயாணத்தின்போது சாப்பாட்டு அறையில் சென்று சாப்பிடுவதற்கு அவர் மறுத்து விட்டதாகவும், அவருடைய அறைக்கே சாப்பாடு கொண்டுவரப்பட்டதாகவும், இதனால் பெருஞ் செலவு ஏற்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.

அவருடைய இணையற்ற பேச்சுத் திறமையைப் பற்றிக் கேள்விப்படும்போது நமக்கு மகிழ்ச்சியுண்டாகிறது. அவர் ஒரு பெரிய பேச்சாளர். அவருடைய தெளிவான கருத்து, இனிமையான உச்சரிப்பு, அரிய வாதத் திறமை இவைகளெல்லாம் சேர்ந்து கேட்போர் அனைவரையும் கவர்ந்து விடுகின்றன. அந்தந்த இடத்துக்குரிய சரியான வார்த்தைகளை அவர் உபயோகிக்கின்றார். அவருடைய நாவிலிருந்து இனிமையான உருது மொழிகள் தங்கு தடையில்லாமல் ஒவ்வொரு வார்த்தையும் அளவோடு ஒழுங்கான உச்சரிப்புடன் வெளிவருகின்றன. ஒரு வாக்கியத்திற்குப் பின் மற்றொரு வாக்கியம் அதனதன் கருத்துக்கேற்ப உயர்ந்த குரலிலும் தாழ்ந்த குரலிலும் தொடர்ந்து அமைதியான கடலில் எழும் அலைகளைப் போல் வருகின்றன". உண்மையான கலாசாரம், மரியாதை, பண்பாடு இவைகளெல்லாம் என்ன என்பதை மௌலானா சாஹிபை சந்திக்கும்

போது அறிந்து கொள்ளலாம். அவருடைய உயர்ந்த கம்பீரமான தோற்றத்தைக் காணும் போது பழங்கால அரசர்களில் ஒருவரைப் பார்ப்பதுபோல் இருக்கும். அவருடைய கலா சாரத்திற்காக மற்றவர்கள் அவருக்கு மரியாதை செலுத்த வேண்டியிருக்கிறது. அவர் எங்கு சென்றாலும் அபுடன் வரவேற்கப் பெறுகின்றார். ஆனால் அந்த மனிதரிடம் ஓரளவு ஒதுங்கிய சுபாவம் இருக்கிறது. இதனால் மக்கள் அவருடன் நெருங்கிப் பழக விரும்புவதில்லை. யாராவது ஒரு குற்றம் செய்வதைக் கண்டால் அவரால் சகிக்க முடியாது. அவரிடம் பழகுகின்றவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். மரியாதை, கண்ணியம், பெருந்தன்மை ஆகியவைகளையெல்லாம் மறந்துவிடாமல் அவருடன் பழக வேண்டும். கடுமையான சொற்கள், நாகரிகமில்லாத பாஷை, மரியாதைக் குறைவான பழக்க வழக்கங்கள் இவைகளையெல்லாம் அவர் வெறுக்கின்றார்.

ஒரு சமயம் நைனி மத்திய சிறையில் இருந்தபோது ஆஸாத் அவர்கள் ஒரு அரசியல் வழக்கில் விசாரணை செய்யப் பெற்றார். எல்லாரையும் கேட்பதுபோல், மாஜிஸ்ட்ரேட் மௌலானாவை நோக்கி, "உங்களுடைய தொழில் என்ன?" என்று கேட்டார். ஆஸாத் தமது தோள்களைக் குலுக்கிக் கொண்டும், மீசையை முறுக்கிக் கொண்டும் ஒரு அலட்சியப் பார்வையுடன் "ஆப்கோ மைக்யா பத்தாஊ(ங்)". (உங்களுக்கு நான் என்ன சொல்வேன்?) என்று பதில் கூறினார்! நீதிபதிக்கு மிகவும் தர்ம சங்கடமாகி விட்டது. அவர் மறுமொழி பேசவில்லை. அவருடைய கேள்வியை மீண்டும் கேட்காமலே இருந்து விட்டார்!

ஆஸாத் அவர்கள் அநேக தடவைகள் சிறைவாசம் செய்திருக்கின்றார். அந்தக் காலத்தில் சிறை வாழ்க்கையில் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் துன்பங்கள் துயரங்கள் எல்லாம் உண்டு. அவைகளையெல்லாம் ஆஸாத் ஏற்றுக் கொண்டார். அவருடைய வழக்கு விசாரணையொன்றில் மிகவும் ஆணித்தரமாகவும் தீர்க்க தரிசனமாகவும் சில விஷயங்களைக் கூறினார்: "எங்களுக்காகச் சரித்திராசிரியர் காத்துக் கொண்டிருக்கிறார். எதிர்காலமும் அவ்விதமே காத்திருக்கிறது. நாங்கள் ஒருவருக்குப்பின் ஒருவர் வந்துகொண்டேயிருக்கிறோம். அதேவேகத்தில் நீங்களும் உங்களுடைய நியாயத் தீர்ப்பை அளித்துக் கொண்டே இருக்கலாம். இப்படிச் சில நாட்கள் செல்லும். அதன் பின்னர் ஒரு காலம் வரும். அப்பொழுது நியாயம் வழங்குவதற்காக ஒரு பெரிய நீதி மன்றத்தில் வேறொருவர் வந்து உட்காருவார்; அந்த நீதி மன்றம் கடவுள் இயற்றிய சட்டங்களினால் நடத்தப்பெறும். காலம்தான் அதன் நீதிபதி".

ஆஸாத் அவர்கள் ஆழ்ந்த கல்வி ஞானம் உடையவர். அவருடைய நூல் நிலையத்தைப்

பார்க்கின்றவர்கள் ஆச்சரியமுறு வார்கள். பலவிதமான புத்த கங்களும் அதில் இருக்கும். மௌலானு மிகவும் குறைவாக வே ஆங்கிலம் பேசுகிருர், ஆயி னும், அவருடைய நூல் நிலயம் சிறந்த ஆங்கில, பிரெஞ்ச் காவி யங்களினுல் நிறைந்திருக்கிறது. அவருடைய நூல் நிலயத்தில் கதம்த, ஸ்பிநோஸா, மார்க்ஸ், ஹாவ்லாக் எல்லிஸ் ஆகிய உல கப் பெரும் சிந்தனையாளர்க ளெல்லாம் இருக்கிருர்கள். உப நிஷத்துக்களும் வேதங்களும் அங்கு இருக்கின்றன. எல்லா நாடுகளேயும் சேர்ந்த மக்களின் வரலாறுகளெல்லாம் வால்யூம் வால்யூம்களாக அங்கு இருக்கின் றன. டால்ஸ்டாய், ரஸ்கின், ஹூ கோ, இவர்களேப் பற்றியெல்லாம் ஒரு தடவைக்கு அதிகமாகவே படித்திருக்கின்ருர். அரசியல் வேலேகளிலிருந்து ஓய்வு கிடைப் பதுமிகவும் கடினம். ஆகையால், அரசியல் வாதிகளுக்கு வாழ்க் கையின் இன்பங்களே அனுப விப்பதற்கு நேரமிருப்பதில்லே. ஆயினும், அரசியல் அலுவல்களி லிருந்து ஓய்வு பெறும் நேரத்தை உலகப் பெறும் அறிஞர்களின் வாழ்க்கையைப் படிப்பதில் செல விடுகின்ருர். உரையாடுதலில் ஆஸாத் ஒரு ஆச்சரியமான மனி தர். "மனத்துக்கு இசைந்த நண்பர்களின் கூட்டத்திலே நகைச் சுவை மிளிர நன்ருக அவர் பேசுவார்" என்று ஆஸப் அலீ எழுதியிருக்கின் ருர்.

அவருடைய பழக்க வழக்கங் கள் வியக்கத்தக்கவண்ணம் எப் பொழுதும் மாருமல் ஒரேவிதமா யிருக்கின்றன. மனிதர்களேப் பற்றித் தீர்ப்பு அளிப்பதில் அவரி டம் அதிக மதி நுட்பம் உண்டு. மிக விரைவில் ஒரு முடிவுக்கு வந்து விடுகிருர். மிகவும் உறுதி யான மனம் படைத்தவர் மௌ லானு. அறிவுக் கூர்மையில் அநேக காங்கிரஸ் தலேவர்களே விட மேலானவராக இருக்கின் ருர். அவருடைய தெளிவான எண்ணமும், பிரச்னேகளேப் புரிந்து கொள்ளும் தன்மையும் வியக்கத்தக்கவை. அவருடைய கட்சி ஆட்களிடம் காணப்படு கின்ற சூழ்ச்சிகள் போட்டிகள் எல்லாம் அவருக்கு ஒரு பெரிய தலேவலியாக இருப்பதுபோல்அவ ருடைய கல்வியமைச்சர் வேலே இலலே! காங்கிரஸில் அடிக்கடி எழுகின்ற சிக்கலான பிரச்னே களேயெல்லாம் மௌலானு அவர் கள் தீர்த்துவைக்கவேண்டியிருக் கிறது. அவிழ்க்க முடியாத அர சியல் சிக்கல்களே அவிழ்ப்பதில் அவருக்கு நிறைபத் திறமை யுண்டு. நிலேமையை உள்ளபடி புரிந்து கொண்டு மனிதர்களேயும் எடை போடுவதில் இணையற்ற திறமையுடையவர் மௌலானு சாஹிப். —"ஸ்வதந்த்ரா".

நூறு தடவை!

"நீங்கள் ஒரு தீர்மானம் செய்வதற்கு முன்பு நூறு தடவை சிந்தியுங்கள். ஆனல் ஒரு தீர்மானத்துக்கு வந்த பின், ஒரே மனிதரைப்போல் அதனே ஆதரித்து நிற்பீர்களாக"

—காயிதெ ஆஸம்
முஹம்மது அலீ ஜின்ஞ.

இஸ்லாத்தில் சமய சகிப்புத் தன்மை

முஹம்மது மார்மடியூக் பிக்தால்

(திருகுர்ஆன் ஆங்கில மொழி பெயர்ப்பாசிரியர்)

("நபியே! பின்னும் அவர்களை நோக்கி) நீர் கூறும்: வேதத்தை யுடையவர்களே! நமக்கும் உங்களுக்கும் (சம்மதமான) ஒரு மத்திய விஷயத்தின்பால் வருவீர்களாக! (அதாவது) 'நாம் அல்லாஹ்வைத்தவிர வேறொன்றையும் வணங்கோம். நாம் அவனுக்கு யாதொன்றையும் இணையாக்கோம். நம்மில் ஒருவரும் அல்லாஹ்வையன்றி எவரையும் ஆண்டவனாக ஒப்புக் கொள்ளோம்' (என்று கூறுவீராக.) விசுவாசிகளே! இதனையும் (அவர்கள் புறக்கணித்தால் அவர்களை நோக்கி)' நிச்சயமாக நாங்கள் (அவன் ஒருவனுக்கே) வழிபட்டவர்களென்று நீங்கள் சாட்சியங் கூறுவீர்களாக!' என்று நீங்கள் கூறி விடுங்கள்" (குர்ஆன், 3: 64).

அல்லாஹ்வே அம்மக்களிடம் இத்துணை விநயமாக வேண்டிக் கொண்டிருப்பதால் அவர்களும் அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிமைப்பட்டவர்களென்பது நன்குதெளிவாகிறது. அல்லாஹ்வின் தூதராக வந்த நாயகத்திருமேனி தாமாகப் பிறிதொரு செயலில் ஈடுபடவியலாது. அவர்களின் பணியெல்லாம் அல்லாஹ்வின் செய்தியை எல்லா மக்களுக்கும் அறிவித்துவிட வேண்டியதேயாகும். புராதனத் தூய்மையுடன் ஒன்றுபட்டு மிளிரும் கிறிஸ்துவ மதம், முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு இஸ்லாமாகவே இருந்தது. புரோகிதத்தையும், மூட நம்பிக்கைகளையும் விட்டொழித்த யூத மதமும் அவர்களுக்கு இஸ்லாமாவே விளங்கியது.

மார்மடியூக் பிக்தால்

ஆனால் நாயகத்தின் செய்தியை கிறிஸ்துவர்களும், யூதர்களும், ஸொராஸ்டிரியர்களும் அலட்சியம் செய்தார்கள். அவர்களின் அரசர்களும் நாயகமவர்கள் அனுப்பியதூதுவர்களைக் கொடுமையாக நடத்தினர்கள். அப்

படியிருந்தும் நாயகத் திருமேனி எவரிடத்திலும் வெறுப்புக் கொண்டிருக்கவில்லை. நாயகத்திற்குப் பின்னுலிருந்தவர்களுங் கூட யூதர்களிடத்திலும் கிறிஸ்துவர்களிடத்திலும் தனிப்பட்ட அன்புடனேயே பழகியிருக்கிருர்கள். ஏனெனின், அவர்களை நடத்த வேண்டிய முறையானது திருகுர்ஆனின் சட்டங்களில்ஒரு பகுதியாக அமைந்து விட்டது.

எகிப்திலே "காப்ட்ஸ்" எனும் பிரிவினர் இன்றுங்கூட முஸ்லிம்களுடன் நெருங்கிய உறவு கொண்டு பழகிவருவதைக்காணலாம். சிரியாவில்வாழும் கிறிஸ்துவர்கள் இக்காலத்திலும் முஸ்லிம்களோடு ஒன்றுபட்டு அன்போடு பழகுவதைப் பார்க்கின்றேம்.

முஸ்லிம்களின் ஆட்சி நிலவியிருந்த நாடுகளிலெல்லாம் குறிப்பாக, ஸ்பெயின், வடஆப்ரிக்கா, ஸிரியா, ஈராக், துருக்கி முதலான இடங்களில் ஏராளமான யூதக் குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. கிறிஸ்துவர்களின் ஆட்சியில் வாழமுடியாமல் முஸ்லிம் நாடுகளில் அடைக்கலம் புகுந்த யூதர்கள் கணக்கற்றவர்கள். அவ்வாறு முஸ்லிம் நாடுகளில் குடியேறிய பலர் தாங்களாகவே முஸ்லிம்களாக மாறியிருக்கின்றனர். மற்றவர்கள் மத நம்பிக்கையை விட்டுக்கொடுக்காமல் யூதர்களாகவே பயமின்றி வாழ்ந்தார்கள். கிறிஸ்துவர்களைப்போல் முஸ்லிம் அரசர்கள் யூதர்களைக் கொடுமைப் படுத்தவில்லை.

முஸ்லிம்களின் ஆட்சியில் கிறிஸ்துவ ஆலயங்கள்

கலீபா உமர் (ரலி) அவர்களது ஆட்சியில் கிறிஸ்துவ ஆலயங்கள் எந்நிலையிலிருந்தன என்பதற்கு எடுத்துக் காட்டாக ஒரு சிறு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடலாம். ஜெரூஸலம் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டது. உடனே கலீபா உமர் (ரலி) அவர்களை ஜெரூஸலத்திற்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தார் படைத் தளபதி. அதனை ஏற்று, கலீபா உமர் (ரலி) ஒரு அடிமை நண்பருடன் ஜெரூசலம் புறப்பட்டார்கள். இருவரும் ஒரே ஒட்டகையில் மாறி மாறி சிறிது தூரம் அமர்ந்தும், சிறிது தூரம் ஒட்டகத்தை நடத்தியும் வந்துகொண்டிருந்தனர். கலீபா அவர்களை வரவேற்பதற்காக, போர்க் கைதிகளான ரோம சாம்ராஜ்யத்தின் அதிகாரிகளுட்பட அனைவரும் காத்திருந்தனர். அவர்கள், அடிமைக்கும் அரசருக்கும் வேறுபாடு தெரியாவண்ணம், எளிய உடையணிந்து நடந்துவரும் உமர் (ரலி) அவர்களைக் கண்டு வியப்புற்றனர். பின்னர் கலீபாவுக்கு மரியாதைகள் வழங்கித் தங்களின் புனித ஆலயத்திற்கு அழைத்துச் சென்றுர்கள். கலீபா மாதா கோயிலிலிருக்கும் பொழுது 'அஸர்' தொழுகையின் நேரம் வந்து விட்டது. இதனையறிந்த கிறிஸ்துவ அதிகாரிகள், ஆலயத்திலேயே ஒரு புறம் தொழுதுகொள்ளுமாறு கூறினுர்கள். ஆனல் உமர் (ரலி) அதற்கிணங்க மறுத்து விட்டார்

கள். தாம் அங்கே தொழுததை உதாரணம் காட்டித் தமக்குப் பின்னர் எவரும் அவ் ஆலயத்தை மஸ்ஜிதாக மாற்றிவிடக் கூடும் என்று அஞ்சி, கோயிலின் வெளியே ஓரிடத்தில் தம் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொண்டார்கள்! அவர்கள் பிரார்த்தனை புரிந்த இடம் இன்று ஒரு பெரிய மஸ்ஜிதாக விளங்குகிறது. அந்த அழகான கட்டிடம், 'மஸ்ஜித் அல் அக்ஸா'வின் எல்லையிலுள்ளது. அதனைக் காணும் யாத்ரீகர்களனைவரும் மஸ்ஜிதென்று அதனைக் கூறுவதில்லை. "ஜெரூசலத்தின் கோபுரம்" என்றே பெயரிட்டழைக்கிறார்கள். கலீபா உமர்(ரலி) விஜயம் செய்த அவ் ஆலயம் இன்னமும் அங்கே உள்ளது. கிறிஸ்துவர்களனைவரும் அதனைப் புனித ஸ்தலமாகக் கருதி வருகிறார்கள். அதுபோலவே பெத்லஹம் நகரில் இன்றும் பல ஆலயங்கள் அப்படியே உள்ளன. குலபாயெ ராஷிதீன்களின் ஆட்சியிலும், பின்னர் உமையாக்களின் அரசாட்சியிலும் இதேவிதமான சமய சகிப்புத் தன்மை நிலவி வந்தது. அக்காலத்தில் ஒரே இடத்தை முஸ்லிம்களும் கிறிஸ்துவர்களும் பிரார்த்தனை ஸ்தலமாகப் பயன்படுத்தி வந்துள்ளார்கள். இத்தகைய பல இடங்களைச் சிரியாவில் காணலாம். லூத் எனும் இடத்தில் செயின்ட் ஜார்ஜ் ஆலயமும், மஸ்ஜிதும் ஒரே கட்டிடத்தில் உள்ளன! இரண்டையும் ஒரேயொரு மதில்தான் பிரிக்கக்கூடியதாயிருக்கிறது. அம்மதிலும் பிற்காலத்தில் கட்டப்பட்டதாகவே தோன்றுகிறது. கிறிஸ்துவர்களுக்குப் பூரணமான மத சுதந்தரம் வழங்கப்பட்டிருந்தது. அவர்களது ஆலயங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும், புதிய ஆலயங்களைக் கட்டிக்கொள்ளவும் உரிமையிருந்தது. முஸ்லிம்களின் பிரார்த்தனைகளுக்கு இடையூறாக இருக்கும் காரணத்தால் கோயில்மணிகளை நீக்கிவிடும்படி பிற்காலத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள், அதற்குப் பதிலாக 'நகரா' ஒலியை வைத்துக்கொள்ளுமாறு முஸ்லிம்கள் கூறினார்கள். சிலுவை யுத்தங்களுக்குப் பின்னர்தான் முஸ்லிம்களின் உள்ளத்தில் சிறிது வெறுப்பு குடிபுக வாரம்பித்தது. ஃபாத்திமி வம்சத்து மன்னர்களால் கிறிஸ்துவர்களுக்குச் சிறிது துன்பம் நேரிட்டது உண்மையே. அதுவே முதலாவது சிலுவை யுத்தம் நடைபெறக் காரணமாக இருந்ததென்றும் சொல்லப்படுகிறது. ஆனால் சிலுவைப் போருக்கென கிறிஸ்துவப் படைகள் சிரியா வந்தடையுமுன்னரே பாத்திமிகள் ஆட்சி நீங்கி, பழைய சமாதான சூழ்நிலை நிலவிவிட்டது.

துருக்கி சுல்தான்களின் ஆட்சியில் கிறிஸ்துவ மடங்களும் அவைகளுக்குச் சொந்தமான சொத்துக்களும் மான்யங்களும் நன்கு பாதுகாக்கப்பட்டன. கிறிஸ்துவ மக்கள் தங்கள் பிரதிநிதிகளின் மூலம் குறைபாடுகளைத் துருக்கியரசாங்கத்தின் முன்னிலையில் முறையிடுவதற்குச் சந்தர்ப்பமளிக்கப்பட்டது. சிறுபான்மையோரின் பிரதிநிதிகளுக்குச் சிறந்த மரியாதை காண்பிக்கப்பட்டது. அவர்க

ளின் வார்த்தைகள் விவாதமின்றி அப்படியே ஏற்றுக் கொள்ளப் பட்டன.

மூன்னூறு ஆண்டுகளுக்கு முன்னே துருக்கியில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே குறிப் பிடுவது பொருத்தமாகும். துருக்கியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கிறிஸ்துவ மதப் பிரசாரகர்கள் காணப்பட் டார்கள். அப்பொழுது ஒரு கொடிய பிளேக் வியாதி நாடெங்கும் பரவியது. ஏராள மானவர்கள் அக்கொள்ளை நோயிக்கு இரையாகி வருந்தி ஞர்கள்.' அதைக்கண்ட கிறிஸ் துவ மதப் பிரசாரகர்கள் அந் நோயால் பாதிக்கப்பட்டவர்கள னைவருக்கும் சிகிச்சையளித்தார் கள். இறந்துவிட்ட மக்களை மத வேறுபாடு பாராது நல்லடக் கம் புரிவதில் உதவி புரிந்தார்கள். இதையறிந்த துருக்கிய அரசாங் கம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கு முறையில் அவர்களின் சொத்துக்களுக் கெல்லாம் அரசாங்க வரியை நீக்கி ஒரு அறிக்கை வெளி யிட்டது. இதற்குப் பின் ஞல் துருக்கியில் குடி புகுந்த மற்றும்பல கிறிஸ் துவப் பிரிவுகளைச் சார்ந்தவர் களுங் கூட அதே உரிமையைப் பெறுவதற்காக முயற்சி செய் தார்கள். அதில் வெற்றியும் பெற்ருர்கள். மேலும் கிறிஸ் துவ மக்கள் தங்கள் மொழிகளை யும் பழக்க வழக்கங்களையும் பேசவும், பின்பற்றவும் முழு உரிமை கொடுக்கப்பட்டிருந்தார் கள். தாங்களாகவே கல்வி பரப் பும் கலாசாலைகளை ஆரம்பித்துக் கொண்டார்கள். கிறிஸ்துவ நாடுகளிலிருந்து தங்கள் பிரசார இயக்கத்தைச் சேர்ந்தவர்களை அடிக்கடி வரவழைத்தார்கள். சுருங்கச் சொன்ஞல், சிறு சிறு தேசிய இனங்களாகத் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளுமளவு சுதந்தரங்களைஅனுபவித்தார்கள்.

சிரியா, எகிப்து, ஈராக் முத லான நாடுகளில் தேசிய இனத் தாலோ, மொழியாலோ முஸ் லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக் குமிடையே மோதல் ஏற்பட வழியில்லை. ஆனுல் துருக்கியிலே, கிறிஸ்துவர்கள் பேசும் மொழி வேறு. அதேபோல் கொள்கையி லும் வேறுபாடுகள் உள்ளன. இனவெறியைத் தூண்டி வளர்க் காமலிருக்கும்வரை முஸ்லிம்கள் அவர்களைப் பரந்த நோக்குட னேயே நடத்தி வந்தார்கள்.

நாம் சமீப கால வரலாற்றை ஆராய்ந்தால்கூட இஸ்லாமிய சகிப்புத் தன்மையைப் பூரண மாக உணர்ந்து பாராட்ட விய லும். 1821-ல் கிரேக்க நாட்டு விடுதலைப் போராட்டத்தின் போது, மூன்று இலட்சம் முஸ் லிம்கள், அதாவது மோரியாவின் முழு மக்கள் தொகையும், கிரீ ஸின் வட பகுதியில் வாழ்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் உட்பட அனைவரும் அழித்து ஒழிக்கப்பட்டார்கள். இந்த வரலாற்று உண்மையை ஐரோப் பிய சரித்திர நூல்கள் எதிலும் நாம் துளியும் காண முடிய வில்லை. இவ்வளவு பெரிய படுகொ லையை முற்றும் மறைத்துவிட்ட ஐரோப்பிய ஆசிரியர்கள், துருக் கியர் படுகொலைகள் செய்ததாக தொகுதி தொகுதிகளாக எழு

திக் குவித்துள்ளார்கள். முஸ்லிம்களின் அடாதசெயல்களுக்கு வழிகாட்டியவர்களும், விரோத உணர்ச்சியைத் தூண்டியர்களும் கிறிஸ்துவர்களே. முஸ்லிம் நாடுகளில் வாழ்ந்த கிறிஸ்துவர்களை அடாத செயல்களில் இறங்குமாறு வெளி நாடுகளிலிருந்த கிறிஸ்துவர்கள் தூண்டிக் கொண்டேயிருந்தார்கள். மத வெறியைக் கிளப்புவதும், முஸ்லிம்களைப் படுகொலை செய்வதும் பெருமைக்குரிய செயலென்று அடிக்கடி பிரசாரம் செய்து வந்தார்கள். துருக்கியின் வீழ்ச்சிக்கு இத்தகைய இனவெறி கலந்த பிரசாரமே காரணமாயிருந்தது. அளவுக்கு மிஞ்சிய சகிப்புத் தன்மையைப் பின்பற்றியதே துருக்கியின் தோல்விக்குக் காரணமென முஸ்லிம்கள் சொல்லத் தொடங்கினார்கள். அரசியலைப்பொறுத்தவரையில், மத சகிப்புத் தன்மையை ஒரு குற்றமாகவும் குறையாகவும் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் உண்மை அவ்வாறன்று. அநீதியால் அழிக்கின்றவர்களைவிட நீதியை அழிக்கின்றவர்களே இரங்கத்தக்கவர்கள்; அனுதாபத்திற்குரியவர்கள். மோரியாவிலிருந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதிலிருந்து ஸ்பெயினின் வீழ்ச்சியும் வேகமாகி விட்டது. கிரானடாவைக் கைப்பற்றியவுடன்முஸ்லிம்களும் யூதர்களும் சிறைப்பிடிக்கப் பெற்றுச் சித்திரவதை செய்யப்பட்டார்கள். அன்றிலிருந்துதான் ஐரோப்பிய நாகரிகத்தின் இரங்கத்தக்க வீழ்ச்சியும் ஆரம்பமாகியது. வரலாற்று ஏடுகளைப் புரட்டும்பொழுது மத சகிப்புத் தன்மை ஒன்றே மனிதப் பண்பாட்டினைக் குறிக்கும் இலக்கணமாகத் தோன்றுகிறது.

நீங்கள் வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டுமா?

தவறாது வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்

அருமையான நூல்

‘வெற்றியின் ரகசியம்’

“சம்பந்தம்” எழுதியது

ஒவ்வொருவரும் படித்துப் பத்திரப்படுத்த வேண்டிய அறிவு நூல்.

விலை ரூபா 1. (தபால் செலவு தனி).

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை-1.

7. சலனமும் சபதமும்

"மெஹருன்னிஸாவை விடுதலை செய்து அனுப்பி விடு" என்று உத்தரவிட்டு விட்டாரே யொழிய ஜஹாங்கீரின் உள் மனம் அதைப் பூரணமாக ஆமோதிக்க வில்லை. "அவள் வெளியேறி விடுவாளோ?" என்று எண்ணிய தும், சோகப் பெருமூச்சு சீறி யெழுந்தது.

அந்தச் சமயத்தில்தான் ஆஸிப் கான் அங்கே வந்தான். ஷேர் கானை பர்துவான் நகரத்திலிருந்து ஆக்ராவுக்கு அழைத்து வந்து விட்டு, தென்பகுதி இராஜ்யங்களை ஒழுங்குபடுத்தி வரச்சென்ற அவன் அன்றுதான் திரும்பியிருந் தான் அவனைக் கண்டதும் ஜஹாங்கீரின் உள்மனம் விசுவ ரூபம் எடுத்தது. "இதோ கடைசி முயற்சியாக இவனைக் கொண்டு காரியத்தை சாதித்தால் என்ன?" என்று நினைத்தார். உடனே அவ னைப் பிரியமாய் வரவேற்று அம ரச் செய்தார் பேரரசர். அப்பொ ழுது "பாபாஜி!" என்று அழைத் துக்கொண்டே அங்கே குஸ்ரு வந்தான் அவன் ஏதோ பேச வாயெடுப்பதற்குள் டில்லிப் பக் கத்திலிருந்து வேகமாக வந்த வீரனொருவன் குறுக்கிட்டு, "அநே கம் பேர்களைக் கைது செய்தும், அவர்களுக்குத் தலைமை வகித்து வரும் அம்மர்ம மனிதனைப் பிடிக்க முடியவில்லை; அவன் பலவித மாறுவேடங்களில் உலவுகின்றானாம்" என்ற செய்தியைக் கூறினான். "அது யார் அப்பேர்ப் பட்ட துணிச்சலுடையவன் நம் நாட்டில்?" என்று எள்ளி நகை யாடினர் அங்கிருந்த அனைவரும். "இதில் நகைப்புக்கெங்கே இட மிருக்கிறது? அவன் அசகாய சூரனாகத்தானிருக்க வேண்டும்! அன்றியும் அரண்மனை முத்திரை யிட்ட கத்தி ஒன்று எதிர்பாராத இடத்தில் எதிர் பாராத நேரத்தில் என் கரத்தில் பாய்ந்து குத்திட்டு நின்றது! அப்படியே அது என் மார்பில் பாய்ந்திருந்தால்! பேர ரசர் அவனை அப்பொழுதே கண்டு பிடித்துத் தீர்த்துக் கட்டி விடுகி றேன் என்றுதான் சொன்னார்! உம்" என்று ஒருவித மனத்தாங்க லுடன் அங்கு வந்து நின்றான் சங்க் ராம்சிங்.

பேரரசருக்குப் பெருந்தொல்லை யாய்ப் போய் விட்டது. இந்நிலை யில். "மெஹ்ருன்னிஸாவை விடு தலை செய்து வெளியேறச் சொல்லி நீங்கள் உத்திரவு அனுப்பிவிட்டதாக அம்மா சொன் னார்கள். அது குறித்து என் மகி ழ்ச்சியைத் தெரிவிக்க வந்தேன், பாபா" என்று சொல்லிக் கொண்டே வெளியேறினான் குஸ்ரு. "அப்படியா செய்தி! நான் பட்ட சிரமத்திற்கு இதுதானா பலன்!" என்று த[illegible]ட்டைப் பிதுக்கிக் கொண்[illegible]யே

சென்றான் சங்க்ராம்சிங். பேரரச னுக்குச் சுருக்கென்று தைத்தன அவன் வார்த்தைகள்.

உடனே ஆஸிப்கானிடம், என்று மில்லாத அளவு மனம் விட்டுப் பேச ஆரம்பித்துவிட்டார் ஜஹாங்கீர், மெஹ்ருன்னிஸாவின் மேலிருந்த மையல் அவரை அத்தனை தூரம் பாதித்துள்ளது என்பதை ஒருவாறு உணர்ந்து கொண்டான் அவன். அரசரின் அந்தரங்கத்திற்குத் தன்னை ஆளாக்கவே உச்சி குளிர்ந்து விட்டது ஆஸிப்கானுக்கு. உடனே புறப்பட்டு விட்டான்.

இரவு வெகுநேரமாகி விட்டது. நேரே மெஹ்ருன்னிஸா தங்கியிருந்த மாளிகையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் ஆஸிப்கான். எப்படியும் எந்த விதத்திலும் தன் சகோதரியின் மனத்தை மாற்றி வெற்றியுடன் திரும்ப வேண்டும் என்ற மனோ திடத்துடனேயேதான் அடியெடுத்து வைத்தான்.

எண்ணப் புயலில் அகப்பட்டுக கொண்டு அந்நேரத்திலும் உறக்கமில்லாமல்தானிருந்தாள் மெஹர். ஆனால் லைலாவோ அன்றுதான் ஆழ்ந்த துயிலில் மூழ்கியிருந்தாள்.

காலடி சப்தம் கேட்டு 'யாரது?' என்று எழுந்து உட்கார்ந்தாள் மெஹர். அச்சமயம் அவள் ஆபரண அலங்காரங்கள் களையப் பெற்றுத் தலைவிரி கோலமாகவே தான் இருந்தாள். "நான்தான் மெஹர்" என்று சொலலிக்கொண்டே சென்று அவள் எதிரில் அமர்ந்தான் ஆஸிப்கான்.

வெகு நாட்களுக்குப் பிறகு அவனைக் கண்டதும் அதுவரை நடந்த நிகழ்ச்சிகளனைத்தும், ஒரு சுருள் படம் விரித்தாற் போலாகியது மெஹ்ருன்னிஸாவுக்கு. சற்று நேரம் ஒன்றும் பேசத் தோன்றாது அப்படியே வாய் புதைந்து நின்றாள். ... உணர்ச்சிக்கு விழிப்பு ஏற்பட்டுவிடவே கண்களில் நீர் முத்திட்டு நின்றது.

அதைக்கண்டதும் "எதற்கும் வருத்தப்படாதே மெஹர்" என்று அவள் மௌனத்தின் ஓரத்தைக் கிழித்தான் ஆஸிப்கான். ஆனால் அவளோ பதில் சொல்லவில்லை, பேசினால் உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது அவளுக்கு.

மெஹ்ருன்னிஸா தலைகுனிந்தவாளாயிருந்தபொழுது ஆஸிப்கான் பேசிக்கொண்டே போனான். "நீயே யோசித்துப் பார் மெஹர். பாரஸீகப் பாலைவனத்தில் நம் குடும்பம் இருந்த கதியென்ன! இப்பொழுது இருக்கும் நிலையென்ன !...உனக்கு அதெலலாம் தெரியாது ! ஒரு தடவை, நம் பெற்றோர் ஒட்டகத்தின் மீதேறி பாலைவனத்தைக் கடந்துகொண்டிருந்தபொழுது. உன்னைக் காப்பாற்ற வகையில்லாது, ஒரு முட்புதரின் பக்கத்தில் உன்னை அனாதையாய்ப் படுக்க வைத்து விட்டு வந்து விட்டார்களாம். அப்பொழுது நீயொரு சின்னஞ் சிறு குழந்தை. கையையும் காலையும் உதைத்துக் கொண்டு அழுது கொண்டிருந்தாய். வெகு தூரம் சென்றபிறகு, மனம் கேட்காமல உன்னைத் திருப்பி எடுத்து வந்துவிடும்படி பாபாவை அனுப்பினார்களாம் அம்மா, ஓடிச்சென்றார் பாபா. அதற்குள் உன்னை ஒரு கருநாகம் வாயைப் பிளந்து கொண்டு விழுங்க வந்ததாம்! அதைக் கொன்றுவிட்டு உன்னைத் தூக்கி வந்ததாக பாபா சொல்வார்கள். அப்பேர்ப்பட்ட நிலையிலிருந்த நமக்கு இப்பொழுது கிடைத்திருக்கும் வாழ்வு யாரால்? எல்லாம் அந்த மொகலாய பேரரசின் தயவினாலதானே !" ஆஸிப்கானின் குரலில் அன்பும் ஆதரவும் பரிதாபமும் பச்சாதாபமும் குழைந்து தெளிந்தன!

ஆனால் அவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் அவளுள்ளத்தை

இஸ்லாமிய உலகம்

மொரோக்கோவிலிருந்து மலாக்கா வரையில்!

வெளியுலகில் இஸ்லாத்துக்கு மகத்தான வெற்றிகள் கிடைத்துக் கொண்டிருந்த அதே சமயத்தில். இஸ்லாத்துக்குள்ளேயே ஒற்றுமையின்மை தலைதூக்கி விட்டது. முஹம்மது நபியவர்களுக்குப் பின் இஸ்லாத்தின் தலைமைப் பதவியை அடையக் கூடியவர் யார் என்பது பற்றிய பிரச்னை எழுந்தது. ஆயினும் இன்று இஸ்லாத்தின் ஒற்றுமை, அசைக்க வியலாதபடி வலுப்பெற்று விளங்குகிறது. ஒரு காலத்தில் பெரிய சாம்ராஜ்யமாக இருந்த இஸ்லாம், நவீன தேசியமென்னும் இரண சிகிச்சையினாலும், பொருளாதார வசதியின்மையாலும் சிதறுண்டு போய்விட்டதெனினும், மத நம்பிக்கையாகிய ஒற்றுமைச் சக்தியினால் அஃது ஒரே சமுதாயமாக விளங்கி வருகிறது. மொரோக்கோவிலிருந்து மலாக்கா வரையில் பரந்து காணப்படுகின்ற முஸ்லிம்கள் ஒரே விதமான நம்பிக்கைகளையுடையவர்களாகவும், ஒரே விதமான பிரார்த்தனை நிகழ்த்துகிறவர்களாகவும், ஒரே புண்ணிய நகரை நோக்கித் தங்கள் பார்வையைத் திருப்புகின்றவர்களாகவும் இருக்கின்றனர். இவைகளே, இவ்வுலகில் கடவுளின் ராஜ்யமாக விளங்கும் இஸ்லாத்தின் கோடிக்கணக்கான பலதிற மக்களிடையே ஒற்றுமை நிலைபெறுதற்குப் பெரிதும் ஆதாரமாய் அமைந்துள்ளன.

ஒவ்வொரு உண்மையான முஸ்லிமும் தனது ஆயுட் காலத்தில் ஒரு முறையேனும் மக்காவுக்கு யாத்திரை சென்று 'ஹஜ்' செய்துவர வேண்டும் என்பது, வேறெந்த இஸ்லாத்தின் கடமையையும்விட உலக முஸ்லிம்களையெல்லாம் ஒற்றுமைப்படுத்தக்கூடிய ஒரு மாபெரும் சக்தியாக விளங்குகிறது. ஒவ்வொரு நாட்டிலிருந்தும் அப்புனித நகருக்குப் போகின்ற யாத்திரீகர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப்போல் ஒரேவிதமான தூய வெள்ளையுடைகள் உடுத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களின் ஏக சகோதரத்துவ உணர்ச்சியில் இனவேற்றுமைகளும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எண்ணமும் அடியோடு ஒழிந்து போகின்றன. இங்கே அவர்கள் நிறைவேற்ற வேண்டிய

'LIFE' கட்டுரை

மூன்று முக்கிய கடமைகள் உண்டு. முதலில் 'கஃபா'வ ஏழு தடவைகள் சுற்றிவரவேண்டும். பின்னர் (சஃபா, மர்[illegible] என்னும்) இரண்டு மலைகளுக்கிடையே ஏழுமுறை தொ[illegible] ஓட்டம் ஓடுதல் வேண்டும். ஹாஜரா (இப்ராஹீம் [illegible]யின் மனைவி) தமது மகன் இஸ்மாயீலின் தாகத்தை போக்குவதற்காக் தண்ணீரைத் தேடி அங்குமிங்கும் ஓடி[illegible] நிகழ்ச்சியை இது நினைவூட்டுகிறது. மூன்றாவதாக (ஹ[illegible]ஜின் ஒன்பதாம் நாளன்று) அரஃபாத் மைதானத்தில் நடு[illegible] பகலிலிருந்து சூரியன் மறையும் வரையில் "கடவுள் மு[illegible]ணிலையில்" நிற்றல் வேண்டும். இதுதான் ஹஜ்ஜின் இ[illegible]தி கடமையும் உச்ச நிலையுமாகும்.

மக்கா, மதீனா இவைகளுக்கு அடுத்தபடி 'ஜெரூஸல[illegible] (இதனை பைத்துல் முகத்தஸ் என்று முஸ்லிம்கள் அழை[illegible]பார்கள்) என்னும் நகர இஸ்லாத்தில் புண்ணிய பூமியா[illegible] விளங்குகிறது. இங்கே யூத, கிறிஸ்துவ புனித இடங்க[illegible]யன்றி, முஸ்லிம்களின் புண்ணிய ஸ்தலமும் இருக்கிறது.

உலக முழுதும் இஸ்லாம் பரவியபோது, வெற்[illegible] கொள்ளப்பெற்ற மக்களோ அல்லது இஸ்லாத்தில் சேர்ந்[illegible] கொண்டவர்களோ தங்களுடைய சமூகப் பழக்க வழக்க[illegible]களையும் குர்ஆனில் கூறப்பெற்றுள்ளவாறு மாற்றிக்கொ[illegible]டனர். பெண்களின் விஷயத்தில் இஸ்லாமிய உலக[illegible] கண்ட மாறுதலே முக்கியமாய்க் குறிப்பிடலாம். பல நா[illegible]களிலும் அநேக நூற்றாண்டுகளாக பெண்கள் தங்களுடை[illegible] வீடுகளுக்கு வெளியே கடுமையான முகமூடியணி[illegible] பர்தாவுக்குள் இருந்து வந்துள்ளனர். ஆனால் மலாயாவி[illegible] வாழும் பெண்ணினம், வேறு எந்த நாட்டையும்விட அதி[illegible] சுதந்தரம் உடையதாய் வெகுகாலத்துக்கு முன்பிருந்[illegible] விளங்கி வருகிறது. மற்றும் அநேக இடங்களில் பெ[illegible]களுக்கு இருந்துவரும் கடுமையான கட்டுப்பாடுகள் [illegible] ஆனில் காணப்படவில்லை. ஆனால் பிற்காலத்திலே முஸ்[illegible] சட்டங்களுக்கு விளக்கம் கூறியவர்கள் அத்தகைய கடு[illegible]யான கட்டுப்பாடுகளை விதித்து விட்டார்கள்.

முஹம்மது நபியவர்கள் தம்முடைய காலத்திலே[illegible] பெண்களின் நிலை உயரச் செய்தார்கள். பெண் குழந்தை[illegible]களைக் கொன்றுவிடும் பழக்கத்தைக் கண்டித்து, "சிறுவ[illegible]களும் சிறுமிகளும் ஆண்டவனின் அன்பளிப்புக்கள்" என[illegible] மக்களுக்குப் போதித்தார்கள். அளவில்லாமல் பெண்களை பலதாரம் கொள்ளும் அராபியர்களின் பழக்கத்துக்